# கிருபை சீர்திருத்த திருச்சபை

## சட்ட அமைப்பு விதி

சென்னை, தமிழ்நாடு

---

*The Constitution of*

# Grace Reformed Church

Chennai, Tamilnadu

---

**Adopted June 27, 2011**

# முகவுரை

*கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற நாங்கள்* ***சென்னை சீர்திருத்த பாப்திஸ்து ஐக்கியம்*** *என்ற பெயரில் சென்னை நகரில் வேத பூர்வமான சபையொன்று அமைய வேண்டும் என்ற வாஞ்சையில் 15.06.2008ல் கூடிவர ஆரம்பித்தோம். சில காலங்களுக்குப் பிறகு இந்தக் கூடுகை சபையாக உருவாக வேண்டும் என்று தீர்மானித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து ஞாயிறு தினத்தில் கூட்டங்களை நடத்தினோம். ஜுன் மாதம் 27ம் நாள் 2011ல் 1689 விசுவாச அறிக்கையை எங்களுடைய விசுவாச அறிக்கையாக ஏற்று* ***கிருபை சீர்திருத்த சபை*** *என்ற பெயரில் சபை சட்ட அமைப்பு விதிகளைக் கொண்டு சீர்திருத்த பாப்திஸ்து திருச்சபையை கர்த்தரின் கிருபையோடும், துணையோடும் அமைத்தோம். இதற்கான ஆலோசனைகளையும், வழிநடத்தல்களையும் நியூசிலாந்திலுள்ள சவரின் கிரேஸ் திருச்சபை மூப்பர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டோம்.*

*இந்த சட்ட அமைப்பு விதிகளை நாம் கொண்டிருப்பதற்குக் காரணம் கர்த்தருடைய சபை தேவனுடைய வீடாக இருப்பதாலும், வேதத்தின் வெளிப்படையானதும் உள்ளடக்கமானதுமான போதனைகளின்படி அது ஒழுங்கோடு அமைய வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்ப்பதாலும்தான். அதன் காரணமாகத்தான் இந்த சட்ட அமைப்பு விதி நூல் முழுவதும் அனைத்து விதிகளுக்குமான பல்வேறு வேத வசனங்கள் ஆதாரமாக, தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இன்னுமொரு முறையில் கூறப்போனால் இந்த சட்ட அமைப்பு விதிகளுக்கு மூல காரணமே கர்த்தரின் வேதம் தான். இதை நமக்கு வரைந்தளித்து விளக்கி உதவிய போதகர் பாலாவிற்கு நாம் மிகுந்த நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.*

இதை ஏற்று சபையாக இருந்து வருகிற அங்கத்தவர்களுக்கு, இந்த சட்ட அமைப்பு விதிகளுக்கு கட்டுப்பட்டு பொறுப்போடு வாழ்ந்து வரவேண்டிய கடமை இருக்கிறது என்ற பெரு நோக்கத்தை மனதில் வைத்து கவனத்தோடு தயாரிக்கப்பட்டதாக இருந்தபோதும், மனிதனால் ஏற்படுத்தப்பட்டதாக, பூரணமற்றதாக இருப்பதையும் உணர்ந்து சபையாக நாம் சத்தியத்தை மட்டுமே பின்பற்றி வாழ்ந்து, சத்தியப் புரட்டலுக்கு எந்தவிதத்திலும் இடங்கொடுத்துவிடாதபடி சகல ஞானமுமுள்ள என்றும் மாறாத தேவன் நாம் வேத ஞானத்தில் மேலும் மேலும் வளரத் துணைசெய்து எம்மைப் பாதுகாக்க வேண்டுமென்று அவரையே நாடி நிற்கிறோம்.

நியூசிலாந்திலுள்ள சவரின் கிரேஸ் திருச்சபை மூப்பர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். இந்த சட்ட அமைப்பு விதிகளைத் தயாரித்து, விளக்கமளித்து, வழி நடத்தி பல்வேறு விதங்களில் நமக்கு உறுதுணையாக இருந்து எதையும் எதிர்பார்க்காமல் உழைப்பைத் தந்துள்ள அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

# பொருளடக்கம்

விதி 1: பெயர் ............................................................6

விதி 2: நோக்கம் ..........................................................6

விதி 3: விசுவாச அறிக்கை .............................................6

விதி 4: உடன்படிக்கை ...................................................7

விதி 5: சபை அங்கத்துவம்...........................................10

விதி 6: சபையின் ஒழுங்குக் கட்டுப்பாடு ........................23

விதி 7: ஆராதனைக்குரிய திருநியமங்கள்........................28

விதி 8: சபை அதிகாரிகள்............................................30

விதி 9: சபைக்கூட்டங்கள் ...........................................43

விதி 10: சகோதர சபைகளுக்கிடையிலான உறவு ...........45

விதி 11: திருச்சபை சட்ட விதிகளின் திருத்தம்................46

சபை சட்ட அமைப்பு விதியின் திருத்தம் .......................48

*கிருபை சீர்திருத்த திருச்சபையின் அங்கத்தவர்களாகிய நாங்கள் கீழ்வரும் விதிகளை ஏற்படுத்தி, அவற்றிற்கு எம்மை ஒப்புக்கொடுக்கிறோம்.*

**விதி 1: பெயர்**

*இச்சபையின் பெயர் **கிருபை சீர்திருத்த திருச்சபையாகும்.***

**விதி 2: நோக்கம்**

*தனிப்பட்ட முறையிலும், ஒருங்கிணைந்தும், பாவிகளுக்கு நற்செய்தியை எடுத்துரைப்பதன் மூலமும், விசுவாசிகளைக் கட்டியெழுப்புவதன் மூலமும், வேதாகமம் போதிக்கும் கர்த்தரின் ஆராதனையை நடத்தி அவரை மகிமைப்படுத்துவதே இச்சபையின் நோக்கமாக உள்ளது. ஆகவே, கர்த்தருடைய பூரணமான நியாயப்பிரமாணத்தையும், அவரது மகிமையுள்ள கிருபையின் நற்செய்தியைப் போதிப்பதையும் நாம் நமது கடமையாகக் கொண்டுள்ளோம். அத்தோடு, விசுவாசத்திற்காகப் போராடுவதையும், புதிய உடன்படிக்கையின் கிருபையின் சாதனங்களை விசுவாசத்தோடும், பரிசுத்தத்தோடும் கொண்டாடுவதையும் நமது நோக்கமாகக் கொண்டுள்ளோம்.*

**விதி 3: விசுவாச அறிக்கை**

*நாம் விசுவாசிக்கும் வேத சத்தியங்களை முழுமையாக வெளிப்படுத்தும் அறிக்கையாக, 1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். நமது விசுவாசம், செயல்கள் ஆகியவற்றை நிர்ணயிக்கும் அதிகாரம் வேதாகமத்திற்கு மட்டுமே உண்டு என்பதை இவ்விசுவாச அறிக்கையின் முதல் அதிகாரம் தெளிவாக விளக்குகிறது. இவ்வரலாற்றுசாதனம், வேதாகமத்தோடு சமமான அதிகாரத்தைக் கொண்டிராவிட்டாலும், நாம் நிச்சயத்துடன் விசுவாசிப்பவைகளைச் சுருக்கமாக விளக்கும் அருமையான சாதனமாகவும், பிரச்சனைகளின்போது நமக்குத்*

துணையாகவும், விசுவாசத்தை உறுதிப்படுத்துவதாகவும், நீதியில் நம்மை வளர்ப்பதற்கும் துணைபுரிகிறது.

**விதி 4: உடன்படிக்கை**

அ. கர்த்தர், தன்னுடைய விசுவாசிகளான மக்களோடு ஓர் உடன்படிக்கையின் மூலம் உறவை ஏற்படுத்திக் கொண்டுள்ளார் (எரேமியா 31:31–34; 32:40; எபிரெயர் 8:7–13; 10:16, 17; 13:20, 21). இயேசு கிறிஸ்துவே புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கிறார் (எபிரெயர் 8:6). அவரது பரிசுத்த இரத்தம், புதிய உடன்படிக்கையின் இரத்தமாக, அவ்வுடன்படிக்கையின் எல்லாப் பலன்களையும் கர்த்தரின் பிள்ளைகள் அனைவருக்கும் பெற்றுத் தருகிறது (மத்தேயு 26:26–28; எபிரெயர் 13:20, 21). கர்த்தர் இவ்வுடன்படிக்கையின் மூலமாக நம்மனைவரையும் ஒருவருக்கொருவரில் அங்கத்தவர்களாக்கியுள்ளார் (ரோமர் 12:4–5; 1 கொரிந்தியர் 12:12–27; எபேசி 4:25). ஆகவே, நாம் கர்த்தருக்கும், ஒருவருக்கொருவரும் ஆற்றவேண்டிய உடன்படிக்கையின் பொறுப்புகளைக் கொண்டவர்களாக இருக்கிறோம். இவ்வுடன்படிக்கையின் மூலம் நியாயப்பிரமாணத்தை நமது இருதயத்தில் எழுதி, தம்முடைய வழிகளின்படி நடக்கக்கூடிய மக்களாக நம்மை மாற்றுவதாகக் கர்த்தர் வாக்குத்தத்தம் செய்துள்ளார்.

ஆ. கீழ்வருவன நமது உடன்படிக்கையின் பொறுப்புகளின் சுருக்கமாகும். (இவை நமது இருதயத்திலே கர்த்தர் எழுதி வைத்துள்ள பரிசுத்த நியாயப்பிரமாணத்தைப் பிரதிபலிக்கின்றன):

1. **கர்த்தரின் புனிதம்** – பழைய, புதிய ஏற்பாடுகளைக் கொண்ட பரிசுத்த வேதாகமத்தின் மூலம் தம்மை நமக்கு வெளிப்படுத்தியுள்ள ஜீவனுள்ள, சத்தியமான, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரான ஒரே தேவனை

மட்டுமே ஆராதிக்க நாம் உடன்படுகிறோம். வேறு எந்த தேவனையும் ஆராதிக்க மாட்டோம்.

2. ***கர்த்தரின் வழிபாட்டின் புனிதம்*** *– கர்த்தரால் அவருடைய வார்த்தையின் மூலம் அனுமதிக்கப்படாத எதையும் ஆராதனையில் சேர்க்காது தம்முடைய வார்த்தையில் அவர் ஏற்படுத்தித் தந்துள்ள ஆராதனை முறைகளின்படி மட்டுமே அவரை ஆராதிக்க நாம் உடன்படுகிறோம்.*

3. ***கர்த்தரின் நாமத்தின் புனிதம்*** *– கர்த்தருடைய நாமத்தை எந்தவிதத்திலும் வீணாகப் பயன்படுத்தாமலும், அவருடைய நாமத்தைத் தவறான விதத்தில் சூட்டிக்கொள்ளாமலும், அவருடைய நாமத்திற்காக நீதியின் பாதையில் நடப்பதற்கு உடன்படுகிறோம்.*

4. ***கர்த்தரின் நாளின் புனிதம்*** *– பரிசுத்தமானதும், அவசியமானதும், கருணைக்கிடமான வேலைகளைத் தவிர வேறு எந்த சொந்த வேலைகளையும் ஆண்டவருடைய நாளில் செய்யாமல், விசேஷமான பொது ஆராதனையிலும், தனிப்பட்ட ஆராதனையிலும் நேரத்தை செலவிட்டு அந்நாளைப் புனிதப்படுத்துவதற்கு உடன்படுகிறோம்.*

5. ***கர்த்தரின் அதிகாரத்தின் புனிதம்*** *– வேதம் ஏற்படுத்தித் தந்திருக்கும் வரையறைக்குட்பட்டு எங்களுக்கு மேல் குடும்பத்திலும், திருச்சபையிலும், நாட்டிலும் (அரசு, வேலை மற்றும் வர்த்தகத்துறையிலும்) இருக்கும் எல்லா அதிகாரிகளுக்கும் மரியாதை கொடுத்தும், அடிபணிந்தும் நடப்பதற்கு உடன்படுகிறோம். அதேநேரம், நாம் மேலதிகாரிகளாகப் பணிபுரிந்தால் நமக்குக் கீழிருப்பவர்களை அன்போடும், நல்ல முறையிலும் நடத்தி கர்த்தருக்குப் பயப்படும்படியும், அவருடைய நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கும்படியும் போதித்து, நடத்தையின் மூலம் உதாரண புருஷர்களாக இருக்கவும் உடன்படுகிறோம்.*

6. ***வாழ்வின் புனிதம்*** – *நம்மையும், நமது அயலாரையும் அழித்துவிடக்கூடிய எதையும் தவிர்த்து, நமது வாழ்க்கையையும் மற்றவர்களுடைய வாழ்க்கையையும் பாதுகாக்கக் கூடிய எல்லா நீதியான காரியங்களையும் செய்வதற்கு உடன்படுகிறோம். விசேஷமாக சபையில் சச்சரவுகளைத் தீர்த்து நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ளவும், விசுவாசமுள்ள ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லவும் முன்நிற்பதற்கு உடன்படுகிறோம்.*

7. ***ஆண், பெண்ணுறவில் புனிதம்*** – *நமது சரீரங்கள் கிறிஸ்துவோடு இணைந்து, பரிசுத்த ஆவி குடிபுகுந்துள்ளவை என்பதை உணர்ந்து, அறிந்து அவற்றை பரிசுத்தமாக வைத்திருந்து நமது நடத்தையிலும், எண்ணங்களிலும், வார்த்தைகளிலும் எந்தவிதமான பரிசுத்தமற்ற காரியங்களுக்கும் இடம் கொடுக்காமல் இருப்பதற்கு உடன்படுகிறோம்.*

8. ***உழைப்பின் புனிதம்*** – *நமது குடும்பங்களின் தேவைகளை நிறைவேற்றவும் தேவையுடன் இருப்பவர்களுக்கு கொடுத்து உதவவும், நேரம், பணம், பொருள் எதையும் திருடாது நமது வேலைகளை அதிக கவனத்துடன் செய்வதற்கு உடன்படுகிறோம்.*

9. ***சத்தியத்தின் புனிதம்*** – *சத்தியத்திற்கு தடங்கலையும் நமது அயலானின் பெயருக்கு கலங்கத்தையும் ஏற்படுத்தக் கூடிய எதையும் தவிர்த்து, மனிதர்களுக்கு மத்தியில் சத்தியத்தை ஊக்கத்துடன் வளர்க்க உடன்படுகிறோம்.*

10. ***வாழ்க்கையில் நமது பங்கின் புனிதம்*** – *வாழ்க்கையில் நமக்குக் கிடைத்திருக்கும் பங்கில் மிகுந்த திருப்தியுடன் வாழ்ந்து, அயலாரின் வளர்ச்சியில் மிகுந்த ஆனந்தத்தை அடைந்து அவர்கள் மேல் பொறாமை அடைவதையும், அவர்களுடைய பொருட்களில் ஆசை வைப்பதையும் தவிர்க்க உடன்படுகிறோம்.*

## விதி 5: சபை அங்கத்துவம்

### அ. சபை அங்கத்துவத்திற்கான வேத ஆதாரம்

*புதிய ஏற்பாடு அனைத்து விசுவாசிகளும் வெளிப்படையாக, சுயமாக, பகிரங்கமாக கிறிஸ்துவிடத்திலும், அவரது மக்களிடத்திலும் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றது. கிறிஸ்துவுக்கும், அவரது சத்தியத்திற்கும் ஒருவர் தன்னை ஒப்புக்கொடுக்கும்போது, கிறிஸ்துவின் மக்களுக்கும் சேர்த்தே தன்னை ஒப்புக்கொடுக்கிறார். இவ்வாறாக கிறிஸ்துவுக்கு ஒருவர் தன்னை ஒப்புக்கொடுக்கும்போது சுயமாகவும், பகிரங்கமாகவும், ஓர் உள்ளூர் திருச்சபையின் அங்கத்துவத்திற்கு அவர் தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று வேதம் எதிர்பார்க்கின்றது. இதற்கான காரணிகளை வேதம் பின்வருமாறு விளக்குகின்றது:*

*1. மத்தேயு 28:18–20ல் கிறிஸ்து கொடுத்துள்ள கட்டளையை நிறைவேற்ற சபை அங்கத்துவம் நிச்சயம் அவசியம். இப்பகுதியில் சீடத்துவத்திற்கும், திருமுழுக்கு அளிப்பதற்கும், போதிப்பதற்கும் இடையில் பிரிக்க முடியாததொரு ஒற்றுமை காணப்படுகின்றது. இக்கட்டளையை நிறைவேற்றிய அப்போஸ்தலர்கள் தாம் திருமுழுக்களித்த விசுவாசிகளை உள்ளூர் திருச்சபைக்குள் கொண்டு வந்தனர். ஆகவே, உள்ளூர் திருச்சபைகளிலேயே இவ்விசுவாசிகள் கிறிஸ்துவின் கட்டளைப்படி அனைத்துப் போதனைகளையும் பெற்றுக்கொண்டனர் (அப்போஸ்தலர் 2:38–42; 1 கொரிந்தியர் 4:17). எத்தியோப்பிய மந்திரியைத் தவிர்த்த வேறு எந்த ஆணோ, பெண்ணோ உள்ளூர் சபையில் அங்கத்தவராக இல்லாமலிருந்ததை வேதம் அறியாது (அப்போஸ்தலர் 8:26–39).*

*2. கிறிஸ்துவின் கட்டளைப்படி திருவிருந்தைப் பெற்றுக்கொள்ள உள்ளூர் திருச்சபை அங்கத்துவம் அவசியமாகிறது. அனைத்து கிறிஸ்தவர்களும் திருவிருந்தைப்*

பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வேதம் எதிர்பார்ப்பதோடு (லூக்கா 22:19; 1 கொரிந்தியர் 11:23–25), திருவிருந்து கொடுக்கும் உரிமையைத் திருச்சபைக்கே கிறிஸ்து அளித்திருப்பதாகவும் போதிப்பதால் (1 கொரிந்தியர் 11:17, 18, 33, 34), அனைத்து கிறிஸ்தவர்களும் வேத பூர்வமாகத் திருவிருந்தைப் பெற்றுக்கொள்ள உள்ளூர் சபையில் சேர வேண்டியது அவசியம்.

3. புதிய ஏற்பாடு உள்ளூர் திருச்சபையைத் தனிநபர்களைக் கொண்டமைந்த ஒரு குழுவாகக் கருதி அவர்களைக் குறித்து:

- எண்ணிக் கணக்கிடக்கூடியவர்கள் என்றும் (அப்போஸ்தலர் 2:41–42; 4:4)
- ஏனையோர் அவர்களோடு இணைய முடியும் என்றும் (அப்போஸ்தலர் 2:47; 5:14)
- குழுவாக சபைத் தலைவர்களைத் தெரிவு செய்யக் கூடியவர்களாகவும் (அப்போஸ்தலர் 6:1–6; 2 கொரிந்தியர் 8:19, 23; அப்போஸ்தலர் 15:22)
- அதிகாரபூர்வமாக கூடிவரக்கூடியவர்கள் என்றும் (அப்போஸ்தலர் 14:27; 15:22)
- சபை ஒழுங்கைக் கடைப்பிடிக்கக் கூடியவர்கள் என்றும் (மத்தேயு 18:17; 1 கொரிந்தியர் 5:5; 2 கொரிந்தியர் 2:6)
- ஒருங்கிணைந்து சபையாக திருவிருந்தில் பங்கு கொள்ளக் கூடியவர்களென்றும் (1 கொரிந்தியர் 11:17–20, 33–34) போதிக்கின்றது

மேற்கூறிய வேதசத்தியங்கள் நாம் வேதபூர்வமான சபை அங்கத்துவத்தை உள்ளூர் திருச்சபைகளில் கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றன.

### ஆ. சபை அங்கத்துவத்திற்கான தகுதிகள்

*1.* அங்கத்தவர்கள் ஆணாகவோ, பெண்ணாகவோ இருக்க வேண்டும் (அப்போஸ்தலர் *5:14; 8:3, 12*). தங்கள் பாவத்திலிருந்து மனந்திருந்தி, மனந்திரும்புதலின் கனிகளைக்கொண்டு, பக்திக்குரிய செயல்களைச் செய்யச்கூடிய கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்தையும் கொண்டிருக்க வேண்டும். அத்தோடு, திருமுழுக்கைப் பெற்றுக்கொண்டு இச்சபை சட்ட அமைப்பு விதிகளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டவர்களாகவும் இருத்தல் அவசியம். அவர்கள் எந்தவொரு மெய்ச்சபையின் பகிரங்க ஒழுங்கு நடவடிக்கையின் கீழ் உள்ளவர்களாக இருத்தல் ஆகாது.

*2.* சபை அங்கத்தவர்கள் சபை அதிகாரத்திற்கு கட்டுப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். சுயமாகவும், ஆக்கபூர்வமாகவும் சபை அதிகாரத்திற்குக் கட்டுப்பட முடியாதவர்கள் அச்சபை அங்கத்தவர்களாக இருத்தல் ஆகாது.

*3.* இச்சபை அமைப்புச் சட்டவிதிகளையும், விசுவாச அறிக்கையையும் ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் சபையின் போதனைகளுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்க முடியாது. ஆகவே, அத்தகையோரை சபை அங்கத்தவர்களாக சேர்ப்பது முறைகேடானதும், வேதத்திற்குப் புறம்பான செயலுமாகும்.

*4.* புதிய விசுவாசிகள் சபை அங்கத்தவர்களாக சேர்வதற்கு முன்பு விசுவாச அறிக்கையில் தேர்ந்த அறிவைக் கொண்டிருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது மத்தேயு *28:18–20*க்கு முரணானது. இவ்வேதப்பகுதி நாம் சீடர்களாக்கி, திருமுழுக்குக் கொடுத்து அதன் பின்பு, திருமுழுக்குப் பெற்றுக்கொண்டவர்களுக்கு கிறிஸ்து போதித்த அனைத்துப் போதனைகளையும் பின்பற்ற வேண்டுமென்று போதிக்குமாறு கூறுகின்றது. அதேவேளை, சபை அங்கத்துவத்தை நாடும் எந்த விசுவாசியும் ஆர்வத்தோடு போதனைகளைப் பெற்றுக்கொள்ளும் மனப்பான்மை கொண்டவர்களாகவும்,

சபை சட்ட அமைப்பு விதிகள், சபையின் போதனைகள் பற்றி தனக்கு ஏற்கனவே தெரிந்த உண்மைகளை ஏற்று நடப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

### இ. சபை அங்கத்தவராகும் முறை

1. சபை அங்கத்தவராக விரும்புபவர்கள் சபை மூப்பர்களுக்கு தங்களுடைய கிறிஸ்தவ அனுபவத்தை எழுத்தில் கொடுத்தல் அவசியம். இது சபை மூப்பர்கள் அங்கத்தவராக வரவிரும்புபவரின் கிறிஸ்தவ அனுபவத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ளத் துணை செய்யும். கல்வி அறிவு இல்லாதவர்களுடையதும், எழுதப்படிக்கத் தெரியாதவர்களுடையதுமான கிறிஸ்தவ அனுபவத்தை வேறு எவராவது எழுத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

2. விண்ணப்பதாரர் வேறொரு சபையில் இருந்து வருபவராக இருந்தால், அச்சபையில் விண்ணப்பதாரரின் அங்கத்துவத்தைப் பற்றி ஆராய்ந்த பின்பே அவரைச் சபையில் சேர்த்துக்கொள்ள முடிவெடுக்க வேண்டும். கூடுமானால் விண்ணப்பதாரர் முன்பிருந்த சபையிலிருந்து சபை மாறும் அனுமதிக் கடிதத்தைப் பெற்று வருவது சிறப்பானது. அத்தகைய கடிதத்தைப் பெற்றுக்கொண்டபோதும் விண்ணப்பதாரர் இச்சபையின் போதனைகளையும், சட்ட விதிகளையும் முழு மனதோடு ஏற்று நடக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

3. விண்ணப்பதாரரின் சாட்சியை எழுத்தில் பெற்றுக் கொண்டபின் மூப்பர்கள் விண்ணப்பதாரரைச் சந்தித்து அவர்களை ஆராய்தல் அவசியம். அச்சந்திப்பின்போது விண்ணப்பதாரரின் இரட்சிப்பின் அனுபவம் நம்பக்கூடியதாக இருக்கிறதா என்பதையும், முழுக்கு ஞானஸ்நானத்தை இரட்சிக்கப்பட்ட பின்னர் முறையாக பெற்றிருக்கிறாரா என்பதையும், 1689 விசுவாச அறிக்கையின் போதனைகளை ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும், சபையின் அங்கத்துவப் பொறுப்புக்களை ஏற்று

நடந்துகொள்ளக் கூடியவராகவும், சபை மூப்பர்களுக்கு பணிந்து, சபை ஒழுங்குக்கட்டுப்பாடுகளுக்கு உடன்பட்டு நடக்கக் கூடியவராக இருக்கின்றாரா என்பதையும், சபையின் ஊழியங்களுக்கு முழு இருதயத்தோடு ஒத்துழைப்பு கொடுக்க மனமுள்ளவராக இருக்கிறாரா என்பதையும் மூப்பர்கள் ஆராய்ந்து தீர்மானிப்பது அவசியம் (அப்போஸ்தலர் 9:26–27; 10:47–48; 11:18, 23).

4. விண்ணப்பதாரர்களோடு மூப்பர்கள் சந்தித்து நடத்திய விசாரிப்பு, மூப்பர்களுக்கு திருப்திகரமானதாக இருந்தால், முறையாக கூட்டப்பட்ட அங்கத்தவர்களின் கூட்டத்தில் அவர்களின் சாட்சி (எழுத்தில் தரப்பட்டது) அங்கத்தவர்களுக்கு வாசிக்கப்பட வேண்டும். அதன்பின் அங்கத்தவர்கள் விண்ணப்பதாரர்களின் வாழ்க்கை மற்றும் விசுவாசம் பற்றிய எந்த சந்தேகங்களையும் மூப்பர்களிடம் தனிப்பட்ட முறையில் கேட்டு நிவர்த்தி செய்துகொள்வதற்கு (மத்தேயு 18:15; லேவி. 19:16, 17), நான்கு வாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரரின் அங்கத்துவத் தகுதி குறித்து தீர்க்கப்படாத சந்தேகங்கள் ஏதும் இருப்பின் மூப்பர்கள் அவை தீர்க்கப்படும்வரை விண்ணப்பதாரர் அங்கத்தவராவதைத் தள்ளிவைத்தல் அவசியம். மூப்பர்களுக்கு விண்ணப்பதாரரின் அங்கத்துவத் தகுதியில் திருப்தி இருக்குமானால் இதற்காக முறையாகக் கூட்டப்பட்ட சபை அங்கத்தவர்களின் கூட்டத்தில் விண்ணப்பதாரரை வாக்கெடுப்பின் மூலம் நான்கில் மூன்று பங்கினரின் ஒப்புதலோடு அங்கத்தவராக சேர்த்துக்கொள்ள வேண்டும் (மத்தேயு 3:6–12; அப்போஸ்தலர் 9:26–27; 1 யோவான் 4:1; வெளிப்படுத்தின விசேஷம் 2:2).

5. தற்காலிக அங்கத்துவம் – வெளியூர்களில் இருந்து வேலை நிமித்தமாக தற்காலிகமாக நமது நகரத்தில் வந்து வாழ்கிறவர்கள் இங்கே நிரந்தரமாக வாழ்கிறவர்கள் அங்கத்தவர்களாக சேர்வதற்காகப் பின்பற்றும் அதே வழிமுறைகளையே பின்பற்ற வேண்டும். அவர்கள் ஏற்கனவே

நம்மைப் போன்ற விசுவாசத்தைக் கொண்டிருக்கும் சகோதர சபையில் அங்கத்தவராக இருந்தால் தற்காலிக அங்கத்தவராக சேர்த்துக் கொள்ளப்பட்டு வழமையான அங்கத்தவர்கள் அனுபவிக்கும் அத்தனை சிறப்புரிமைகளையும், பொறுப்புக்களையும் அனுபவிக்கலாம். அவர் நமது பிரதேசத்தைவிட்டு நிரந்தரமாக நீங்கும்போது அவர் தற்காலிக அங்கத்துவத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும். அவர் தொடர்ந்து இச்சபையின் அங்கத்தவராகக் கருதப்படக்கூடாது (அப்போஸ்தலர் 18:27; ரோமர் 16:1–2; 2 கொரிந்தியர் 3:1; கொலோசெயர் 4:10; 3 யோவான் 5–10).

*6.* வெளியூர்களில் இருப்பவர்களுக்கான அங்கத்துவம் – நம் சபை அங்கத்தவரொருவர் வெளியூர்களில் வேலை நிமித்தமாகப் போய் வாழ நேர்ந்து அங்கு நல்ல சபையொன்றில் உடனடியாக இணைந்துகொள்ள முடியாத நிலையில், அங்கொரு சபையில் இணைந்துகொள்ளும் வரையில், அவருடைய வேண்டுகோளின்படி தற்காலிகமாக தொடர்ந்து நம் சபையில் அங்கத்தவராக இருக்கலாம். அந்நிலையில் அவர் தொடர்ந்து மூப்பர்களோடு முறையான தொடர்பு வைத்திருந்து பொறுப்போடு நடந்துகொள்ளுவது அவசியம். இருந்தபோதும் தாம் வாழும் இடத்தில் நல்ல சபையொன்றில் இணைந்துகொள்வதே நலமானது. இவ்வாறாக நிரந்தரமாக ஊரில் இல்லாத அங்கத்தவர்கள் சபைக்கூட்டத்தில் வாக்களிக்க அனுமதியில்லை.

மூப்பர்களின் ஆலோசனையின்படி சரீரநிலை பாதிக்கப்பட்டு (Invalid) சபைக் கூட்டங்களுக்கு தொடர்ந்து வரமுடியாதவர்களுக்கும், அதே போன்ற வேறு சூழ்நிலைகளில் இருப்பவர்களுக்கும் சபை அங்கத்துவம் கொடுக்கப்படலாம் (அப்போஸ்தலர் 8:27–40 பொதுவான போதனை).

## ஈ. சபை அங்கத்தவர்கள் அனுபவிக்கும் சிறப்புரிமைகள்

1. *திருவிருந்தில் கலந்துகொள்ளுதல் (அப்போஸ்தலர் 2:41–42; 1 கொரிந்தியர் 11:18–26, 33).*

2. *சபை நடவடிக்கைகள் சம்பந்தமாகக் கூட்டப்படும் கூட்டங்களில் கலந்துகொண்டு, அவற்றில் முறையாகப் பங்குபெற்று வாக்களிக்கும் உரிமை (அப்போஸ்தலர் 6:1–6; 2:41; 4:4; 5:13–14; 1 கொரிந்தியர் 5:4–7, 13).*

3. *தங்களுடைய ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்தி கிறிஸ்துவின் இராஜ்யத்தை சபையின் ஊழியங்களில் பங்குகொண்டு விஸ்தரித்தல்.*

4. *போதகர்களின் போதக ஊழியம் மற்றும் மேய்த்தல், மேற்பார்வை* (Pastoral oversight) *ஆகியவற்றின் பலன்களைப் பெற்றுக்கொள்ளுதல்.*

5. *சபை அங்கத்தவர்களின் கவனிப்பு மற்றும் அவசியமானபோது அவர்களின் ஒழுங்கு நடவடிக்கை ஆகியவற்றின் பலன்களை அடைதல்.*

## உ. சபை அங்கத்தவர்களின் கடமைகளும், நடத்தையும்

*நம்முடைய 1689 விசுவாச அறிக்கையில் சொல்லப் பட்டிருப்பதுபோல சகல சபை அங்கத்தவர்களும் பரிசுத்தவான்களாக இருக்க வேண்டும் (ரோமர் 1:7). கர்தத்ரின் உள்ளூர் சபையில் அங்கத்தவராக இருக்கும் சிறப்புரிமை, சுவிசேஷ அழைப்புக்கேற்ப நடந்துகொள்ளவும், திருச்சபையின் சமாதானம் மற்றும் அதன் நலனுக்கேற்ப நடந்துகொள்ள வேண்டிய கடமைகளையும் உள்ளடக்கியிருக்கிறது (எபேசியர் 4:16; பிலிப்பியர் 1:27). அத்தகைய கடமைகள் பின்வருமாறு:*

*1. **சபைக்கூட்டங்களில் கலந்துகொள்ளுதல்** – தவிர்க்க முடியாத காரணங்களான உடல்நலக்குறைவு, ஓய்வுநாளான ஞாயிறு தினக்கடமைகளை மீறாத அசாதாரண வேலை*

நிலைமைகள், மற்றும் இவை போன்ற வேறு காரணிகளால் தடை ஏற்பட்டாலொழிய (Providential hindrance) சபையின் அனைத்துக் கூட்டங்களிலும் அங்கத்தவர்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டும். சபைக்கூட்டங்களாவன:

1. ஞாயிறு தினத்தில் நிகழும் கூட்டங்கள்.
2. ஜெபக்கூட்டம்.
3. சபை நடவடிக்கைகள் சம்பந்தமான கூட்டங்கள்.
4. அவசியமான வேளைகளில் நடத்தப்படும் சபை அங்கத்தவர்களின் கூட்டங்கள்.

மேற்குறிப்பிட்ட எக்கூட்டத்திலாவது அங்கத்தவர்கள் தவிர்க்க முடியாத காரணங்களினால் கலந்துகொள்ள முடியாதபோது சபை மூப்பர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

*2.* **அனுதின ஜெபமும், ஓய்வுநாள் அனுசரிப்பும்** – ஒவ்வொரு அங்கத்தவரும் தனி கிருபையின் நியமங்களான தனி ஜெபத்திலும் (*மத்தேயு 6:6, 10; சங்கீதம் 55:17; 88:9; தானியேல் 6:10*), கர்த்தரின் வார்த்தையை அன்றாடம் தியானிப்பதன் மூலமும் (*சங்கீதம் 1:2; 119:11, 97*), நியாயத்தீர்ப்பு நாளுக்கேற்ற உத்தமத்தோடு நல்ல மனச்சாட்சியைக் கொண்டிருப்பதன் மூலமும் (*அப்போஸ்தலர் 24:16; 1 தீமோத்தேயு 1:19; எபிரெயர் 10:22; 13:18*), கர்த்தரின் வார்த்தையின் அடிப்படையில் தவறாது குறிப்பிட்ட காலங்களில் முழுமையாக சுயத்தை ஆராய்ந்து பார்த்துக்கொள்ளுவதன் மூலமும் (*சங்கீதம் 139:23–24; 2 கொரிந்தியர் 13:5, 2 பேதுரு 1:10–11; 1 யோவான் 5:13*), ஆவிக்குரியவிதத்தில் கவனத்தோடு ஆண்டவருடைய நாளான கிறிஸ்தவ ஓய்வுநாளை அனுசரிப்பதன் மூலமும் தனிப்பட்ட விதத்தில் கர்த்தரோடு தனக்கிருக்கும் உறவையும், ஐக்கியத்தையும் பாதுகாத்து நடந்து வாழ்ந்து வர வேண்டும்.

*3. **காணிக்கைகளாலும், நன்கொடைகளாலும் சபையைத் தாங்குதல்*** – வேதம், கிறிஸ்தவ விசுவாசிகள் தங்களுடைய வருமானத்திற்கேற்ற விதத்திலும், ஒழுங்காகவும், காணிக்கைகளை சபைக்குக் கொடுத்து கர்த்தரின் ஊழியங்களைத் தாங்க வேண்டுமென்று போதிப்பதால், அனைத்து அங்கத்தவர்களும் இவ்விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும் (மல்கியா 3:8–10; 1 கொரிந்தியர் 16:1, 2; 2 கொரிந்தியர் 8, 9). நமது ஆராதனையின் வெளிப்பாடாகவும், வேதபூர்வமாகக் காணிக்கையளித்தலின் அம்சமாகவும், எல்லா அங்கத்தவர்களும் தசமபாகத்தை (ஒருவரின் மொத்த வருமானத்தின் பத்துப்பாகம்) சபைக்கு அளித்தல் வேண்டும். இதற்கு மேலாக ஒருவரின் சக்திக்கும், விருப்பத்திற்கும் ஏற்றவகையில் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் அளித்தல் வேண்டும் (2 கொரிந்தியர் 8:1–5; யாத்திராகமம் 35:2–7, 28).

*4. **சமாதானத்தை விருத்தி செய்தலும், கட்டியெழுப்புதலும்*** – பல அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும் சரீரமாக சபை வேதத்தில் விளக்கப்பட்டிருந்தபோதும் ஒவ்வொரு அங்கத்தவரும் சபையில் குறிப்பிட்ட பங்கை வகிப்பதோடு முழு சபையினுடைய ஒற்றுமையையும், நலனையும் பாதுகாப்பதிலும் கருத்தாக இருக்க வேண்டும் என்றும் அது விளக்குகிறது (1 கொரிந்தியர் 12:12–27; எபேசியர் 4:4, 11–16). இந்த சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் முழு சபையின் நலனுக்காக உழைக்க வேண்டும் என்று சபை எதிர்பார்க்கிறது. ஒவ்வொரு அங்கத்தவரும் சக அங்கத்தவர்களைத் தெரிந்துகொள்ளுவதில் கருத்தாக செயல்பட வேண்டும். அவர்களில் அன்புகாட்டி, ஆறுதலளித்து, ஊக்கப்படுத்தி, அவசியமேற்படுகிறபோது பொருளாதார தேவைகளை சந்தித்து உதவ வேண்டும் (மத்தேயு 18:15; 1 தெசலோனிக்கேயர் 5:15; எபிரெயர் 3:12–13, 10:24–25). அத்தோடு, சகலவிதமான புறங்கூறுதலையும், அவதூறுப் பேச்சுக்களையும் தவிர்த்து மூப்பர்கள் இரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற சபை சம்பந்தமான சகல

விஷயங்களையும் வெளியில் தெரியப்படுத்தாமல் தங்களுக்குள் கவனத்தோடு இரகசியமாக வைத்திருக்க வேண்டும் (நீதிமொழிகள் 11:13).

5. **குடும்ப வாழ்க்கை** – வேதம் போதிக்கும் குடும்பம் பற்றிய அனைத்துப் போதனைகளுக்கும் கட்டுப்பட்டு எல்லா அங்கத்தவர்களும் நடத்தல் அவசியம். கணவன் குடும்பத் தலைவனாக இருந்து குடும்பத்தை அன்போடும், ஞானத்தோடும், உறுதியோடும், வழிநடத்த வேண்டும் (எபேசியர் 5:25; 1 தீமோத்தேயு 3:4, 5; 1 பேதுரு 3:7). மனைவி எல்லாவற்றிலும் கணவனுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் அவசியம் (எபேசியர் 5:22–24; 1 பேதுரு 3:1–6). கணவனும், மனைவியும் இணைந்து தங்களுடைய பிள்ளைகளைக் கர்த்தரின் வழியில் வளர்த்தல் வேண்டும் (எபேசியர் 6:4). பிள்ளைகளுக்கு முன்னுதாரணமாக இருந்து அன்றாடம் அவர்களுக்கு வேதத்தைப் போதிக்க வேண்டும் (உபாகமம் 6:4–9). அத்தோடு அவசியமான வேளைகளில் அவர்களைக் கண்டித்துத் தண்டிக்கவும் தவறக்கூடாது (நீதிமொழிகள் 13:24; 22:15; 29:15; எபிரெயர் 12:7).

6. **சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபடுதல்** – ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தரளித்திருக்கும் கிருபையின் ஈவுகளையும், சந்தர்ப்பங்களையும் பயன்படுத்தி ஜெபத்தாலும், வார்த்தையாலும், கிரியைகளாலும், தங்கள் வீட்டிலும், வெளியிலும் கிறிஸ்துவின் இராஜ்யத்தின் விஸ்தரிப்பிற்கான கடமைகளில் தவறாது ஈடுபடுதல் அவசியம் (ரோமர் 12:6; அப்போஸ்தலர் 1:8 பொதுவான விதி).

7. **கிறிஸ்தவ சுதந்திரம்** – இச்சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் கர்த்தரின் வார்த்தை போதிக்கும் அனைத்து ஒழுக்க விதிகளையும் தங்கள் வாழ்க்கையில் அன்றாடம் கடைப்பிடித்தல் வேண்டும் (ரோமர் 8:3, 4; 1 கொரிந்தியர் 9:20, 21; யாக்கோபு 2:12). கர்த்தர் கண்டிக்காத அல்லது தடைசெய்யாத எந்தவொரு காரியத்தையும் ஒரு விசுவாசி பின்பற்றுவது அவரது கிறிஸ்தவ சுதந்திரமாகும். அத்தகைய

சுதந்திரத்தை தேவபயத்தோடும், கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் விதத்திலும், பலவீனமான கிறிஸ்தவர்களைப் பாதிக்காத விதத்திலும், தன்னுடைய ஆத்துமாவின் நலத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கத்தோடும் கிறிஸ்தவர்கள் பயன்படுத்த வேண்டும் (1 பேதுரு 1:17; 1 கொரிந்தியர் 10:31; 1 கொரிந்தியர் 8:9; ரோமர் 15:1–3; 1 கொரிந்தியர் 9:19–22; ரோமர் 13:14; 1 கொரிந்தியர் 6:12; 9:24–27; கலாத்தியர் 5:22, 23; 1 பேதுரு 2:16).

8. **சபைத் தலைவர்களுக்கு துணையாக இருந்து அவர்களுக்கு கட்டுப்படுதல்** – இச்சபையின் அங்கத்தவராக சேரும் அனைவரும் சபை மூப்பர்களின் ஆவிக்குரிய அதிகாரத்தை ஏற்று, அதற்குக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும் (1 கொரிந்தியர் 16:15, 16; 1 தெசலோனிக்கேயர் 5:12, 23; எபிரெயர் 13:17). சபைத் தலைவர்களுக்காகவும், அவர்களுடைய பணிகளுக்காகவும் ஜெபிக்க வேண்டும் (எபேசியர் 6:18–19). அவர்களோடு நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டு, அவர்கள் செய்கின்ற பணிக்காக அவர்களை மதிக்க வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 5:12–13). அவர்கள் செய்யும் நல்ல பணிகள் அத்தனைக்கும் ஒத்துழைப்பு கொடுப்பதோடு, அவர்களுக்கு நேரும் கஷ்டங்களிலும் பங்குபெற வேண்டும் (2 தீமோத்தேயு 1:15). அவர்களுடைய நற்பெயருக்கு பாதுகாப்பாக இருந்து அதற்கு எந்தக் கலங்கமும் நேராமலும், அவமதிப்பு ஏற்படுத்தாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும் (அப்போஸ்தலர் 23:5; 1 தீமோத்தேயு 5:19).

அவர்களுடைய கிருபை, விசுவாசம், பக்திவிருத்தி மற்றும் கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற அவர்களுடைய பக்திவிருத்தியுள்ள கோட்பாடுகளைப் பின்பற்றுவதும் (1 கொரிந்தியர் 11:1; எபிரெயர் 13:7; 1 பேதுரு 5:3), கற்றுக்கொள்ளும் மனப்பான்மையோடும், எதிர்பார்ப்போடும் அவர்களுடைய போதனைகளைப் பெற்றுக்கொள்ளுவதும், அதே நேரம் வேதத்தின் அதிகாரத்திற்கு மட்டுமே எந்தவேளையிலும்

பணிந்துபோவதும் சபை மூப்பர்களுக்கு துணைபோவதின் அங்கங்களாக அமையும் (அப்போஸ்தலர் 17:11; யாக்கோபு 1:19–21; 1 தெசலோனிக்கேயர் 2:13). கிறிஸ்துவுக்குள் நாம் பூரணத்துவம் அடையவும், முதிர்ச்சியடையவும் நம்முடைய இருதயங்களைக் கண்காணித்து அவர்கள் பணிபுரிவதால் அவர்களுடைய ஆவிக்குரிய எச்சரிக்கைகளையும், கண்டிப்புகளையும் தாழ்மையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் (எபிரெயர் 13:17; கொலோசெயர் 1:28). கர்த்தருடைய வீடான சபை சம்பந்தமாக எல்லோரும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளையும், திட்டங்களையும் அவர்கள் வகுக்கின்றபோது அவற்றைக் கவனத்தோடு ஏற்று நடந்துகொள்ளுவதும் (1 தீமோத்தேயு 3:5, 15; எபிரெயர் 13:17), அவர்களுடைய தீர்மானங்கள் நமக்கு தனிப்பட்ட முறையில் ஏற்புடையதாக இல்லாமலிருக்கும்போது அவற்றிற்கு எதிராக நடந்துகொள்ளாமலும், குறைகூறாமல் இருப்பதும் அவர்களுடைய பணிகளுக்கு துணைபோவதின் அங்கங்களாகும் (ரோமர் 10:21; 1 கொரிந்தியர் 10:10; பிலிப்பியர் 2:14; யூதா 11).

9. கிறிஸ்துவை விசுவாசித்து இச்சபையின் அங்கத்தவராக இணைந்துள்ள நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் அங்கத்தவராகவுள்ளோம் (ரோமர் 12:5). இத்தகைய சிறப்புரிமை பல பொறுப்புக்களையும் நமக்களித்துள்ளது. நாமனைவரும் ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் (எபேசியர் 4:25). ஏனையோரின் மகிழ்ச்சியிலும், துன்பத்திலும் நாம் பங்கேற்க வேண்டும் (1 கொரிந்தியர் 12:26). ஒருவருக்கொருவர் நமது தவறுகளை நேரடியாக அறிக்கையிடல் வேண்டும் (யாக்கோபு 5:16). ஒருவருக்கொருவர் மேற்பார்வை செய்து, விசுவாசத்துடன் கண்டித்துத் திருத்துவதுடன், உற்சாகப்படுத்தி, எல்லாவிதமான கோள்சொல்லுதல், புறம்பேசுதல் ஆகிய செயல்களைத் தவிர்த்து, மூப்பர்கள் சபைக்காரியங்கள் பற்றி இரகசியமாக வைத்திருக்கும்படி நம்மிடம் எதிர்பார்ப்பனவற்றை சபையின் நன்மைகருதி நமக்குள்ளேயே வைத்திருத்தல் வேண்டும்

(நீதிமொழிகள் 11:13; மத்தேயு 18:15; 1 தெசலோனிக்கேயர் 5:14, 15; எபிரெயர் 3:12, 13; 10:24, 25).

10. உலக இச்சையில்லாமல் வாழுதல் – கிறிஸ்தவ சுதந்திரத்தின் ஆசீர்வாதங்களை உலக இச்சைக்கு இடங்கொடுத்து வாழ்வதற்கு ஒரு சாக்குப்போக்காக பயன்படுத்துவதை கர்த்தர் அனுமதிக்கவில்லை (கலாத்தியர் 5:13; 1 பேதுரு 2:16). மாறாக, கிறிஸ்தவர்கள் பாவத்திற்கு அடிமையாக இருப்பதில் இருந்து விடுதலை அடைந்து கேடான உலக வாழ்க்கைக்கு மாறான அடையாளங்களைக் கொண்டு கர்த்தருக்காக வாழ பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் (லேவியராகமம் 18:1–30; தீத்து 2:11–14; 1 பேதுரு 1:14–15). அத்தோடு, கிறிஸ்துவின் சீஷர்கள் உலகத்தை நேசிக்கக் கூடாது என்ற கட்டளை இருக்கிறது (சங்கீதம் 139:19–22; யாக்கோபு 4:4; 1 யோவான் 2:15). பழைய வாழ்க்கை முறைக்கு அவர்கள் திரும்பிப் போகக்கூடாதென்று எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள் (எபேசியர் 4:17–22; 5:7–12; தீத்து 2:12; 3:3); 1 பேதுரு 4:3–4). கடவுளற்ற சமுதாயத்தின் பண்பாட்டுக்கு தங்களுடைய வாழ்க்கையில் இடங்கொடுக்காமல் வாழ அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (நீதிமொழிகள் 1:10–19; ரோமர் 12:1–2; யாக்கோபு 1:27). ஆகவே, இந்த சபையின் அனைத்து அங்கத்தவர்களும் இந்த உலகத்தின் எண்ணங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும், பாவகரமான வழிநடத்துதல்களுக்கும் விலகி வாழும்படியாக எதிர்பார்க்கப்படுகிறார்கள். முக்கியமாக, இந்த உலக வாழ்க்கையில் அத்தியாவசியத் தேவையாக இந்த சமுதாயம் கருதுகின்ற பொருளாசைக்கு இடங்கொடுக்காமல் இருக்க வேண்டும் (மாற்கு 8:36; லூக்கா 12:15; 1 யோவான் 2:15–17). அங்கத்தவர்கள் இந்த உலகத்தின் கேடுகளான குடிவெறிக்கும், போதைப் பொருட்களுக்கும், பெருந் தீனிக்கும், இன்டர்நெட்டில் அவலட்சணமான காட்சிகளையும் செய்திகளையும் வாசிப்பதற்கும், திருமணத்திற்கு வெளியில் எந்தவிதமான உடலுறவுக்கும், தன்னினச் சேர்க்கைக்கும் தங்கள் வாழ்க்கையில் இடங்கொடுக்காமல் இருக்க வேண்டும்

*(1 கொரிந்தியர் 6:9–10; கலாத்தியர் 5:19–21). அத்தோடு, அங்கத்தவர்கள் அவிசுவாசிகளோடு மிகவும் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளுவதையும் (நியாயாதிபதிகள் 16:4–5; 1 இராஜாக்கள் 11:1–4, 9; நீதிமொழிகள் 2:16–17; 6:20, 23–25), திருமண பந்தத்தில் ஈடுபடுவதையும் தவிர்க்க வேண்டும் (2 கொரிந்தியர் 6:14;1 கொரிந்தியர் 7:39). அதேபோல, அங்கத்தவர்கள் தங்கள் மீதும், குடும்பத்தார் மீதும் பக்திவிருத்தியற்ற இந்த உலகத்து சமுதாயத்தின் செல்வாக்கு எந்தவிதத்திலும் அமைந்துவிடுவதை கவனத்தோடு ஆராய்ந்து தவிர்த்துக்கொள்ள வேண்டும் (ரோமர் 12:1–2).*

***ஊ. சபை அங்கத்தவர்களின் பட்டியல்***

*மூப்பர்கள் இதற்கு முன்னாலும், தற்போதும் இருக்கும் அனைத்து அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியலை வைத்திருத்தல் வேண்டும். முன்னாலிருந்த அங்கத்தவர்கள் விலகிய அல்லது விலக்கப்பட்ட தேதி, அவற்றிற்கான காரணங்களையும் இப்பட்டியல் கொண்டிருக்கும்.*

## விதி 6: சபையின் ஒழுங்குக் கட்டுப்பாடு (Church Discipline)

### *அ. வளர்ச்சிக்குரிய ஒழுங்குக் கட்டுப்பாடு*
(Formal discipline)

*கிறிஸ்துவின் சீடர்கள் அனைவருக்கும் அவசியமான கட்டுப்பாட்டினை (போதனைகளும், கண்டித்துத் திருத்துதலும்) உள்ளூர் திருச்சபையே ஒவ்வொரு விசுவாசிக்கும் அளிக்கிறது (1 கொரிந்தியர் 12:12–27; 1 தெசலோனிக்கேயர் 5:12–15; எபிரெயர் 3:12; 10:24, 25). அங்கத்தவர்கள் ஒருவருக்கொருவரும், மூப்பர்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்கும்போது தனித்தனியாகவும், கூட்டாகவும் அவர்கள் பரிசுத்தத்தை அடைகிறார்கள் (எபேசியர் 5:21; 1 பேதுரு 5:5). சிலவேளைகளில் இத்தகைய அன்றாட ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அவசியமான கட்டுப்பாட்டிற்கு அங்கத்தவர்களில் எவராவது உடன்பட மறுக்கும்போது*

அவர்கள்மேல் திருத்தும் இயல்புடைய ஒழுங்குக் கட்டுப்பாட்டினைக் கொண்டுவர நேரிடுகிறது.

## ஆ. திருத்தும் இயல்புடைய ஒழுங்குக் கட்டுப்பாடு (Corrective discipline and Exclusion from membership)

1. அங்கத்தவர்களில் எவராவது விதி 5, "உ" வின் விதிமுறைகளின்படி நடக்கத் தவறினால் அல்லது அவற்றிற்கு முரணாக நடந்தால் சபை மூப்பர்கள் முதலில் அவர்களைத் தனிமையில் சந்தித்துப் பேசி, கண்டித்து திருத்தி பிரச்சனையைத் தீர்க்க முயல்வர். குற்றங்கள் ஒவ்வொன்றும் மத்தேயு 18:15–16; ரோமர் 16:17–20; 1 கொரிந்தியர் 5:1–13; 2 தெசலோனிக்கேயர் 3:6–15; 1 தீமோத்தேயு 5:19–20; தீத்து 3:10 ஆகிய வேத பகுதிகளின் போதனைகளுக்கேற்றபடி சரியான முறையில் திருத்த நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும். சில தவறுகள் அங்கத்தவர்கள் முன்னிலையில் கண்டிக்கப்பட வேண்டும். அத்தகைய தவற்றைச் செய்தவர்கள் அங்கத்தவர்கள் முன்னிலையில் மன்னிப்பு கேட்ட வேண்டும் (மத்தேயு 18:17 ரோமர் 16:17–20; 1 கொரிந்தியர் 5:1–15; 1 தீமோத்தேயு 1:20 தீத்து 3:10). திருத்த இயல்புடைய ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு சபை அங்கத்தவர்கள் அனைவரும் ஒத்துழைத்து உடன்பட்டு நடக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கிறார்கள். திருத்தும் இயல்புடைய ஒழுங்குக்கட்டுப்பாட்டைத் திருச்சபையில் பரிசுத்தத்தைப் பாதுகாக்கவும், கர்த்தரின் மகிமைக்காகவும், தவறிழைத்தவர்கள் மனந்திருந்தி ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரவுமே எப்போதும் சபையில் கொண்டுவரப்பட வேண்டும்.

2. தவறிழைத்துள்ள அங்கத்தவர்கள் தொடர்ந்தும் திருந்தாமலிருந்தால் சபை அவர்களுடைய சபை அங்கத்துவ சிறப்புரிமைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும். இது ஒவ்வொருவரும் செய்துள்ள பாவத்தின் தன்மையைப் பொறுத்து அமையும். சிறப்புரிமைகளை

நிறுத்துவதற்கு முன் மூப்பர்கள் முறையாகக் கூட்டப்பட்ட சபைக்கூட்டத்தில் தங்களுடைய சிபாரிசுகளையும், அதற்கான காரணங்களையும் அறிவித்து அவற்றை எந்தவிதத்தில் நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அங்கத்தவர்களுக்கு ஆலோசனை கூறுவார்கள். தற்காலிகமாக சிறப்புரிமைகளை இழக்கும் அங்கத்தவர்கள் மீது சில கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டபோதும் தொடர்ந்தும் கிறிஸ்தவ சகோதரர்களாகவே சபையால் நடத்தப்பட்டு வருவார்கள். இதற்குப் பின்பும் அவர்கள் திருந்தாமலிருந்தால் இறுதிக் கட்டுப்பாடாக அவர்கள் சபை அங்கத்துவத்தில் இருந்து முற்றாக சபையால் நீக்கப்படுவர் (மத்தேயு 18:15–20; 1 கொரிந்தியர் 5:1–13; கலாத்தியர் 6:1).

கீழ்வரும் பாவகரமான நடவடிக்கைகள் ஓர் அங்கத்தவரின் சிறப்புரிமைகளை மூப்பர்கள் தற்காலிகமான நிறுத்தி வைக்கும்படிச் செய்யும் (Suspension):

அ. **ஒரு சகோதரனுக்கெதிராகப் பாவம் செய்து மனந்திருந்த மறுத்தல்** (Stubborn Private Offender) மத்தேயு 18:15–17. தனிப்பட்ட முறையில் ஒரு சகோதரனுக்கெதிராக பாவம் செய்த ஒருவரை மத்தேயு 18:15–16ஐப் பின்பற்றி திருத்த முயற்சி செய்த பிறகும் அவர் திருந்த மறுத்தால் அது சபை மூப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டு மூப்பர்கள் அச்சகோதரனைத் திருத்த முயல வேண்டும். அதன்பிறகும் அச்சகோதரன் திருந்த மறுத்தால் மூப்பர்கள் அவர் திருந்தும்வரை அவருடைய சிறப்புரிமைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி சபைக்கு ஆலோசனை கூற வேண்டும்.

ஆ. **சபையில் பிரிவினையை உண்டாக்கும் போதனைகளும், நடத்தைகளும்** (Divisive teaching) ரோமர் 16:17–20; தீத்து 3:10. ஓர் அங்கத்தவர் வேதத்திற்கு முரணான போதனைகளையும், 1689 விசுவாச அறிக்கை மற்றும் சபை சட்ட அமைப்பு விதிகளுக்கு எதிரான போதனைகளையும் பின்பற்றி, சபையில் குழப்பத்தை உருவாக்க முயன்றால் அச்சகோதரன் பிரிவினையை உருவாக்கும் மனிதனாகக்

கருதப்பட்டு சபை அங்கத்துவத்தில் இருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட வேண்டும். எல்லா அங்கத்தவர்களும் சபையின் ஒற்றுமைக்காக பாடுபட வேண்டிய பொறுப்பைக் கொண்டிருப்பதால் எந்தவித பிரிவினையை ஏற்படுத்தக்கூடிய நடத்தையையும் கண்டித்து அதை சபை மூப்பர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். இச்சூழ்நிலையில் மூப்பர்கள் வேத போதனைகளின்படி, மிகவும் பொறுமையோடும், தாழ்மையோடும் நடந்து தவறு செய்பவர்களைத் திருத்த முயலவேண்டும். அவர்கள் தொடர்ந்து திருந்த மறுத்தால், அதைச் சபைக்கு அறிவித்து அங்கத்துவத்தில் இருந்து அவர்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும்.

இ. ***ஒழுங்கீனமான நடத்தை*** (Disorderly behaviour) *2 தெசலோனிக்கேயர் 3:6–15.* எல்லா மனிதர்களுக்குமாக கர்த்தர் ஏற்படுத்தித் தந்துள்ள படைப்பின் நியமங்களையும் (தொழில், ஓய்வுநாள் மற்றும் திருமணம்), சபைக்காக கிறிஸ்து தன்னுடைய வார்த்தையின் மூலம் வெளிப்படுத்தி இச்சபை சட்ட அமைப்பு விதிகளில் நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் அனைத்திற்கும் எதிராகப் பேசியும் நடந்தும் வரும் ஒருவருடைய நடத்தை ஒழுங்கீனமானதாகக் கருதப்பட்டு அவ்வாறு நடந்துகொள்கிறவர் சபை அங்கத்துவத்தில் இருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட வேண்டும். மூப்பர்கள் வேதபோதனைகளின்படி, மிகவும் பொறுமையோடும், தாழ்மையோடும் இவரைத் திருத்த முயலவேண்டும். அவர் திருந்த மறுத்தால் அதைச் சபைக்கு அறிவித்து சபை அங்கத்துவத்தில் இருந்து அவரைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டும்.

ஈ. ***பாரதூரமான பாவம்*** (Scandalous sin). ஓர் அங்கத்தவர் பாரதூரமான பாவத்தைச் செய்தபின்பு அதற்காக மிகவும் மனம்வருந்தி, மன்னிப்புக்கேட்டு, மூப்பர்களின் சகல ஆலோசனைகளுக்கும் கட்டுப்படுவது போல் தோன்றினால் அவரை ஒழுங்குக் கட்டுப்பாட்டின் மூலம் சபையில் இருந்து முற்றாக நீக்கக்கூடாது. இருந்தபோதும்,

*கிறிஸ்துவின் பெயருக்கும், அவருடைய சபைக்கும் களங்கம் ஏற்பட்டு விடாதபடிக்கும் (2 சாமுவேல் 12:14; ரோமர் 2:14), ஏனையோர் அத்தகைய பாரதூரமான பாவங்களில் ஈடுபடாமல் இருப்பதற்கு எச்சரிக்கையாகவும் (1 தீமோத்தேயு 5:20), அப்பாரதூரமான பாவத்தைச் செய்த சகோதரன் தான் செய்துள்ள பாவத்தின் கொடுமையை உணர்ந்து தனது இருதயத்தை சோதித்துப் பார்த்துக்கொள்ளவும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அவரைச் சபை அங்கத்துவத்தில் இருந்து தற்காலிகமாக நிறுத்தி வைப்பது அவசியம்.*

*ஒருவரைத் தற்காலிகமாக சபை அங்கத்துவத்தில் இருந்து நீக்கிவைக்கும் நிலைமை உருவானால், மூப்பர்கள் முறையாகக் கூட்டப்பட்ட அங்கத்தவர்கள் கூட்டத்தில் தெளிவான விளக்கங்களைக் கொடுத்து அங்கத்தவர்களின் கேள்விகளுக்கு தகுந்த பதில்களை அளித்து அதன் பிறகே திருத்த நடவடிக்கைக்கு அங்கத்தவர்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். வாக்கெடுப்பின் மூலம் நான்கில் மூன்று பங்கு அங்கத்தவர்களின் அங்கீகாரத்தைப் பெற்ற பிறகு மூப்பர்கள் திருத்த நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவருக்கு சபையின் தீர்மானத்தை அறிவிக்க வேண்டும்.*

*3. திருச்சபையில் இருந்து முற்றாக விலக்கி வைத்தல்* (Excommunication)

***அ. ஒழுக்க சம்பந்தமான காரியங்கள்*** *– 'ஒழுக்கக்கேடான' முறையில் வாழுகிறவர்கள், அவற்றிலிருந்து திருந்தாமலும், தைரியத்தோடும் அவ்வாறு தொடர்ந்து வாழுகிறபோது, அவர்களைச் சபையில் இருந்து முற்றாக விலக்கி வைக்கப்பட வேண்டும். மூப்பர்கள் முதலில் அவரை வேதபோதனைகளின்படி கண்டித்துத் திருத்த முயல வேண்டும். அவர் திருந்த மறுத்தால் முறையாகக் கூட்டப்பட்ட சபைக்கூட்டத்தில் அதை அறிவித்து ஒழுக்கக்கேடாக நடந்துகொள்பவரை சபை அங்கத்துவத்தில் இருந்து முற்றாக விலக்கி வைக்க வேண்டும். ஓர் அங்கத்தவர் சபையில் இருந்து ஒழுங்குக்கட்டுப்பாட்டின்*

அடிப்படையில் விலக்கப்படும்போது, அதை சபை கூடிவந்து செய்தல் வேண்டும் (மத்தேயு 18:17; 1 கொரிந்தியர் 5:1). இதை வாக்கெடுப்பின் மூலம் நான்கில் மூன்று பங்கு அங்கத்தவர்களின் ஒப்புதலோடு செய்தல் அவசியம்.

ஆ. **வேதசத்தியத்தோடு தொடர்புடைய காரியங்கள் –** அதேபோல வேதசத்தியங்களுக்கு எதிராக ஒருவர் விசுவாசித்து, பின்பற்றும் போதனைகள் 'போலிப்போதனைகளாக' கருதப்பட வேண்டும். இது மூப்பர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அவர்களுடைய கண்டிப்புக்கும், ஆலோசனைகளுக்கும் உடன்பட்டு திருந்த மறுப்பவரை ஒழுக்கக்கேடான நடத்தையுள்ளவரை முற்றாக சபையில் இருந்து விலக்குவது போல் விலக்கி வைக்க வேண்டும்.

இ. ஒழுங்குக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டவர்கள் தங்கள் தவறுக்காக மனந்திருந்தி மன்னிப்புக்கேட்கும்போது, அது நம்பத்தகுந்ததாக இருக்குமாயின் சபை அத்தகையோரை மன்னித்து மறுபடியும் முழு அங்கத்தவராக ஏற்றுக்கொள்ள வேண்டும் (2 கொரிந்தியர் 2:6–8).

### விதி 7: ஆராதனைக்குரிய திருநியமங்கள்

அ. உள்ளூர் திருச்சபை வாராந்தர பொது ஆராதனையை (Public worship of God) ஊக்கப்படுத்துவதையும், பாதுகாப்பதையும் பிரதான நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் (யோவான 4:23–24; மத்தேயு 28:18–20; அப்போஸ்தலர் 2:47; 1 கொரிந்தியர் 14:23–25). இதன் காரணமாக சபை 1689 விசுவாச அறிக்கையின் 22ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள போதனையைப் பின்பற்றும். இப்பகுதி வேதபோதனையின்படி கர்த்தரின் மகிமைக்காக பொது ஆராதனை மரியாதையோடும், கவனத்தோடும் நடத்தப்பட வேண்டும் என்பதை விளக்குகிறது.

ஆ. திருமுழுக்கு, திருவிருந்து ஆகிய இரு திருநியமங்களை சபை கடைப்பிடிக்கும்படியாக கிறிஸ்து கட்டளையிட்டுள்ளார்.

இவை இரண்டும் எவரையும் பாவத்திலிருந்து இரட்சிக்கும் வல்லமையைக் கொண்டிருக்கவில்லை. இவற்றின் மூலம் எந்தவிதமான கிருபையும் விசுவாசிகளுக்கு ஊட்டப்படுவதில்லை. இத்திருநியமங்கள் விசேஷமான கிருபையை அளிக்கும் சாதனங்களாக அல்லாமல், விசேஷமான சாதனங்களாக மட்டும் அமைந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளும் விசுவாசிகளின் விசுவாசத்திற்குப் பெருந்துணை புரிகின்றன.

### *1. திருமுழுக்கு*

கிறிஸ்துவை அறிக்கையிடும் விசுவாசிகளுக்கு மட்டுமே திருமுழுக்கு கொடுக்கப்பட்டு திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். திருமுழுக்கைப் பிதா, குமாரன், ஆவியாகிய திரித்துவக் கடவுளின் பெயரிலேயே கொடுக்க வேண்டும். திருமுழுக்கு கொடுக்கும்போது விசுவாசியைத் தண்ணீரில் முழுமையாக தாழ்த்தி எடுத்தல் வேண்டும். இம்முறை மட்டுமே வேதபூர்வமானது. இந்த முறையில் திருமுழுக்கு பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே சபையில் அங்கத்தவர்களாக சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

### *2. திருவிருந்து*

ஒரு விசுவாசி திருமுழுக்கை ஒரு முறை மட்டுமே பெற்றுக்கொண்டு திருச்சபையில் சேருகிறார். ஆனால், திருவிருந்தில், சபையாகக்கூடி விசுவாசிகள் அடிக்கடி பங்குகொள்ள வேண்டும். திருவிருந்தை வேதபூர்வமாக கொடுக்கும்படியாக மூப்பர்கள் அதில் பங்குகொள்பவர்கள் சபை அங்கத்தவர்களாகவும், பரிசுத்த வாழ்க்கை வாழ்கிறவர்களாகவும் இருக்கிறார்களா என்று பார்த்துக்கொள்ளுதல் அவசியம். கர்த்தரின் சபைக்கு மதிப்பளித்து அதன் அதிகாரத்தின் கீழ் இருக்கும் அத்தனை விசுவாசிகளையும் திருவிருந்தில் பங்குகொள்ள அனுமதிக்க

வேண்டும் அப்போஸ்தலர் 2:41–42; 1 கொரிந்தியர் 10:16; 1689 விசுவாச அறிக்கை 26:12). மெய்யான சுவிசேஷ சபைகளில் அங்கத்தவர்களாக விசுவாசத்தோடு இருந்து வருகின்ற அனைவரும் திருவிருந்தில் கலந்துகொள்ளலாம். இந்த விஷயத்தில் அசாதாரண நிலையில் (Exceptional situation) இருப்பவர்களோடு மூப்பர்கள் கலந்து பேசி திருவிருந்தில் கலந்துகொள்ள அனுமதியளிப்பார்கள். திருவிருந்து மிகவும் பரிசுத்தமுள்ள திருநியமமாக இருப்பதால் அது கிறிஸ்துவின் சரீரத்தையும், திருஇரத்தத்தையும் அடையாளப்படுத்துவதாக இருந்தபோதும் பயபக்தியோடும், சகல மரியாதையோடும் அநுசரிக்கப்பட வேண்டும். மாதமொரு முறைக்கு குறையாது திருவிருந்து சபையில் அநுசரிக்கப்பட வேண்டும்.

### விதி 8: சபை அதிகாரிகள்

#### அ. பொதுவான அறிக்கை

கிறிஸ்துவே சபையின் தலைவராக இருக்கிறார். எந்தவொரு உள்ளூர் சபையும் கிறிஸ்துவால் நியமிக்கப்படும் அதிகாரிகளாலேயே நடத்தப்பட வேண்டும் என்று அவர் ஏற்படுத்தியுள்ளார். உள்ளூர் சபைகள் மூப்பர்களாலும் (Pastors/Elders), உதவியாளர்களாலும் (Deacons) வழிநடத்தப்படல் வேண்டும். இவ்விரு அதிகாரிகளையும் தவிர வேறு எந்த அதிகாரிகளையும் நாம் வேதத்தில் பார்ப்பதில்லை (பிலிப்பியர் 1:1; 1 தீமோத்தேயு 3:1–13). மூப்பர்கள் சபையை மேற்பார்வை செய்யும் பணிக்காக அழைக்கப்பட்டிருக்கின்றபடியால் அவர்களை வேதம் 'கண்காணிகள்' என்றும் (அப்போஸ்தலர் 20:28; 1 பேதுரு 5:2), சபை ஆத்துமாக்களை ஆவிக்குரியவிதத்தில் வழிநடத்துகின்ற பொறுப்பைக் கொண்டிருப்பதால் 'மேய்ப்பர்கள்' என்றும் (அப்போஸ்தலர் 20:28), சபையை அக்கறையோடு கவனித்து ஆளுகின்ற பொறுப்பைக் கொண்டிருப்பதால் 'ஆளுகிறவர்கள்' என்றும் (1 தீமோத்தேயு 3:4; எபிரெயர் 13:17, 24) அழைக்கிறது.

தங்கள் மத்தியில் சபை அதிகாரிகளாவதற்கான வேதபூர்வமான இலக்கணங்களையும், ஈவுகளையும் கொண்டிருப்பவர்களை ஆராய்ந்து பார்த்து தெரிந்துகொள்ள வேண்டிய கடமை பொறுப்பு சபைக்கிருக்கிறது. அத்தகைய இலக்கணங்களைக் கொண்டவர்கள் சபையால் முறையாக அங்கீகரிக்கப்பட்டு (அப்போஸ்தலர் 6:5–6) ஜெபத்தோடு (அப்போஸ்தலர் 6:6) அப்பணியில் நியமிக்கப்பட வேண்டும். சபை அதிகாரிகளாக நியமிக்கப்பட்டவர்களுக்கு சபை கட்டுப்பட வேண்டும் (லூக்கா 10:16; யோவான் 13:20; எபிரெயர் 13:17; 1 பேதுரு 5:5).

## ஆ. பொதுவான சில தகுதிகள்

1. இச்சபையின் அனைத்து அதிகாரிகளும் சபையின் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும்.

2. மேற்குறிப்பிட்ட எந்தவொரு பதவிக்கும் தெரிவு செய்யப்படும் அதிகாரிகள் சபையின் விசுவாச அறிக்கையையும், சட்டவிதிகளையும் மனப்பூர்வமாக ஏற்று நடப்பவர்களாக இருக்க வேண்டும். இவற்றைத் தொடர்ந்து விசுவாசிக்கவோ, பின்பற்றவோ இயலாத நிலை ஏற்பட்டால் உடனடியாக அதனை ஏனைய சபை அதிகாரிகளுக்கு நல்ல முறையில் அறிவித்தல் வேண்டும்.

3. பெண்களுக்கு கர்த்தர் அநேக ஈவுகளைத் தந்துள்ளபோதும், சபை அதிகாரிகளுக்கு அவர்கள் பலவிதங்களில் துணைபுரியக்கூடியவர்களாக இருந்தபோதும் (ரோமர் 16:1–6; பிலிப்பியர் 4:3; 1 தீமோத்தேயு 3:11), வேதம் மூப்பர்களாகவோ (போதகர்களாகவோ), உதவியாளர்களாகவோ பெண்கள் சபையால் தெரிவுசெய்யப்படுவதைத் தடைசெய்கின்றது (1 கொரிந்தியர் 14:33–35; 1 தீமோத்தேயு 2:8–15; 3:1–17). ஆகவே பெண்களை இப்பதவிகளுக்கு நியமிக்கவோ, தெரிவு செய்யவோ கூடாது. அத்தோடு ஆணும் பெண்ணுமாகக் கூடிவரும் அதிகாரபூர்வமான சபைக்கூட்டங்களில் பெண்கள் வசனத்தைப் போதிப்பதன் மூலமும், கூட்டத்தை நடத்துவதன்

மூலமும், பாடல்களில் வழி நடத்துவதன் மூலமும், ஜெபிப்பதன் மூலமும், திருநியமங்களை நிர்வகிப்பதன் மூலமும் கூட்டத்தை வழிநடத்தவோ, தலைமை தாங்கவோ கூடாது (1 கொரிந்தியர் 14:33–35; 1 தீமோத்தேயு 2:8–15).

## இ. மூப்பர்கள்

*1. மூப்பர்களின் அதிகாரம் –* கர்த்தர் வேதத்தை மட்டுமே அதிகாரமாக தந்திருப்பதால் சபை அதிகாரிகள் அதற்கு எப்போதுமே கட்டுப்பட்டவர்கள் (கொலோசெயர் 1:18; மத்தேயு 20:28; 1 கொரிந்தியர் 7:17; கொலோசெயர் 4:16; 2 தெசலோனிக்கேயர் 2:15; 3:14; 1 தீமோத்தேயு 3:14–15; 1 கொரிந்தியர் 14:36–38). வேதம் வெளிப்படையாகவோ அல்லது உள்ளடக்கமாகவோ அளிக்கும் எந்தப் போதனையையும் சபை அதிகாரிகள் உதாசீனப்படுத்தவோ, நிராகரிக்கவோ அல்லது அவற்றிற்கு முரணாக நடந்துகொள்ளவோ கூடாது. ஒரு காரியத்தைக் குறித்து அது எப்படி நடக்கவேண்டும் என்று கிறிஸ்து வெளிப்படையாக கட்டளையைத் தராதிருந்தால் பொதுவான வேத போதனைகளையும், படைப்பின் மூலம் கர்த்தர் விளக்கும் சத்தியங்களின் அடிப்படையிலும் நடந்துகொள்ள வேண்டும் (1 கொரிந்தியர் 11:13–14; 14:40).

மூப்பர்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதான கண்காணிப்பை சபைக்குக் கொடுப்பதற்கான அதிகாரத்தை வேதம் வழங்குகிறது (அப்போஸ்தலர் 20:17–35; 1 பேதுரு 5:1–2). கர்த்தரின் சகல ஆலோசனைகளையும் பிரசங்கத்தின் மூலமும் போதனைகளின் மூலம் வழங்குவது அதன் ஒரு பகுதி (அப்போஸ்தலர் 20:21, 27; தீத்து 1:9). அத்தோடு சபையின் ஒவ்வொரு அங்கத்தவரின் ஆத்துமாவின் ஆவிக்குரிய நலத்தையும் கண்காணிக்க வேண்டும் (எபேசியர் 4:11–16; கொலோசெயர் 1:26; 1 தெசலோனிக்கேயர் 2:12; எபிரெயர் 13:17). மேலும், பொதுவான வழிமுறைகளை ஏற்படுத்தியும், குறிப்பிட்ட தீர்மானங்களை எடுத்தும் சபையின் எல்லாவித கடமைகளிலும் அதை வழிநடத்த

வேண்டும் (1 தீமோத்தேயு 3:4–5; எபிரெயர் 13:17; 1 பேதுரு 5:1–2). இருந்தபோதும், சபையின் பொதுவான மனநிலையை நிதானித்து உணர்ந்தும் (எசேக்கியேல் 34:4; 1 தீமோத்தேயு 3:4–5; 1 பேதுரு 3:7), வேலைக்காரர்களுக்குரிய தாழ்மையோடு நடந்தும் (மத்தேயு 20:25–28; 1 பேதுரு 5:3) சபையாருக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். ஆகவே, பெரிதான எந்த விஷயத்தில் ஈடுபடுகிறபோதோ அல்லது பெரிதான செலவுகளைச் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறபோதோ மூப்பர்கள் சபையாரின் ஆலோசனையையும், துணையையும் நாடுவதோடு தகுதியான சந்தர்ப்பங்களில் சபையாரின் முடிவுக்கும் இடங்கொடுக்க வேண்டும் (அப்போஸ்தலர் 19:30; 21:11–14). அத்தோடு சபை அதிகாரிகளின் நியமனத்தில் சபையாரின் வாக்கெடுப்பு மூலமான அங்கீகாரம் கட்டாயம் இருக்கவேண்டும் என்றும் (அப்போஸ்தலர் 6:2–5; 14:21–23), தற்காலிக அங்கத்துவ நீக்கம் மற்றும் முற்றாக அங்கத்துவ விலக்கல் ஆகிய சந்தர்ப்பங்களில் சபையின் அங்கீகாரம் அவசியம் (1 கொரிந்தியர் 5:4–5; 2 தெசலோனிக்கேயர் 3:14) என்றும் வேதம் போதிக்கிறது.

இந்த சபை சட்ட விதிகளில் எந்த மாற்றத்தையும் கொண்டு வரவும் சபையின் ஒப்புதல் அவசியமாகிறது. அதை விதி 11 விளக்குகிறது.

இறுதியாக, சபையில் அங்கத்தவர்களைச் சேர்ப்பதிலும், நீக்குவதிலும் சபையாரின் ஆலோசனையும், பொதுவான அனுமதியும் அவசியமாகிறது. இதை விதிகள் 5, 6 ல் காணலாம்.

2. சபையை மூப்பர்களே கிறிஸ்துவின் கீழ் மேய்ப்பர்களாக இருந்து ஆளவேண்டுமென்று வேதம் போதிக்கின்றது. மூப்பர்கள் போதிப்பதன் மூலமும், மேய்த்தலின் மூலமும், மேற்பார்வை செய்வதன் மூலமும் சபையை ஆள வேண்டும். 1 தீமோத்தேயு 3 மற்றும் தீத்து 1 ஆகிய பகுதிகளில் விளக்கப்பட்டுள்ள இலக்கணங்களைக் கொண்டவர்களாக மூப்பர்கள் இருத்தல் அவசியம்.

*3.* மூப்பர்களால் சபை ஆளப்பட வேண்டும் என்று வேதம் போதித்தபோதும், அவர்களில் முழு நேர ஊழியத்திற்காக அழைக்கப்பட்டவர்கள பெரும்பாலும் பிரசங்கம் மற்றும் போதிக்கும், மேய்க்கும், ஊழியங்களில் முன்னின்று உழைப்பர். மூப்பர்களில் அதிக அனுபவத்தையும், போதக, பிரசங்க ஊழியத்தில் மற்றவர்களைவிட மேலான ஈவுகளையும் கொண்டிருப்பவர்கள் இவ்வாறு முழு நேர ஊழியத்தில் சபையால் ஈடுபடுத்தப்படுவார்கள். இதன் காரணமாக சபையில் ஒரு மூப்பராவது முழு நேர ஊழியத்தில் ஈடுபடுவது சபைக்கு நலமானது. சகல மூப்பர்களும் இணைந்து ஒருமித்து உழைத்தல் அவசியம். எல்லா மூப்பர்களுமே தங்களுடைய ஈவுகளுக்கும், அனுபவத்திற்கும் தகுந்தபடி ஏதோ ஒருவிதத்தில் போதிக்கும், மேய்க்கும் ஊழியத்தில் சபையில் ஈடுபடுதல் அவசியம்.

*4.* முழுநேர ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்களின் தேவைகளைச் சபை கவனித்துக்கொள்ளல் அவசியம். அவர்கள் தங்கள் நேரத்தைச் செலவிட்டு ஜெபத்திலும், போதக ஊழியத்திலும் ஊக்கத்தோடு உழைக்கவும், தங்களுடைய குடும்பத்தின் தேவைகளைக் கவனித்துக்கொள்ளவும் வசதியாக, சபை தன் தகுதிக்குத் தகுந்தவாறு ஆர்வத்தோடும், ஊக்கத்தோடும் அவர்களுக்கு ஊதியமளித்து அவர்களது ஊழியத்தின் பயன்களை அறுவடை செய்துகொள்ள வேண்டும் (1 கொரிந்தியர் 9:9–11; 1 தீமோத்தேயு 5:17–18).

*5.* ஒன்றிற்கு மேற்பட்ட மூப்பர்களைக் கொண்டதாக சபை அமைப்பு காணப்பட வேண்டுமென்று வேதம் போதித்த போதும் (அப்போஸ்தலர் 14:23; 20:17; பிலிப்பியர் 1:1; தீத்து 1:5), ஒரு சபை எத்தனை மூப்பர்களைக் கொண்டிருக்க வேண்டுமென்றோ, அவர்கள் எவ்வளவு காலத்திற்கு ஊழியம் செய்யவேண்டுமென்றோ வேதம் தெரிவிக்கவில்லை. மெய்யாகத் தேவனால் வேதபூர்வமாக இத்தகைய ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் இவ்வூழியத்தைச் செய்வதற்காகவே அழைக்கப்படுகிறார்கள்.

ஆனால், ஒரு மூப்பர் தனது பதவிக்கான இலக்கணங்களைத் தொடர்ந்து கொண்டிராதபோது தொடர்ந்து அப்பதவியை வகிக்கும் தகுதியை இழக்கிறார்.

*6*. இந்த சபை சட்டவிதிகள், ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் சபையைக் கண்காணிப்பதையே வேதம் எதிர்பார்க்கிறது என்று அனுமானிக்கின்றது (அப்போஸ்தலர் *14:23; 20:17*; பிலிப்பியர் *1:1*; தீத்து *1:5*). அவ்வாறாக ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இல்லாத நிலையிலும், அத்தகைய அமைப்பை விரைவில் ஏற்படுத்திக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்திலும் ஏற்கனவே இருக்கும் ஒரே மூப்பர் (உதவியாளர் அல்லது உதவியாளர்கள்) தங்களோடு நல்லுறவில் இருக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களை இந்த சபை சட்ட விதிகளுக்கு ஏற்பக் கொண்டிருந்து *1689* விசுவாச அறிக்கையை முழுமனதோடு விசுவாசித்து பின்பற்றும் சகோதர சபையிடம் இருந்து தற்காலிகமான போதக ஆலோசனைகளையும், மேற்பார்வையையும் பெற்றுக்கொள்ள வேண்டும். போதகக் கண்காணிப்பையும், வழமையாக சபையில் இருக்க வேண்டிய ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களின் தலைமையைப் பெற்றுக்கொள்ளுவதுமே இதன் பிரதான நோக்கம்.

இத்தகைய பொறுப்பை ஏற்றுக்கொள்ள உடன்படும் சகோதர சபையின் தலைமையின் கீழ் தகுந்த காலத்துக்கு (Resonable period) சபை தன்னை உட்படுத்திக்கொள்ள வேண்டும். சபையில் ஒரு மூப்பர் இருந்தால் சகோதர சபையின் மூப்பர்கள் இவருடைய சக மூப்பர்களாக பணியாற்றுவார்கள். இத்தகைய நடைமுறை எழுத்தில் இருந்து முறையாகக் கூட்டப்பட்ட சபை அங்கத்தவர்கள் கூட்டத்தில் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும். அங்கத்தவர்களில் நான்கில் மூன்று பங்கினர் இந்த நடைமுறைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். வருகின்ற காலங்களில் ஒவ்வொரு வருடமும் சபையின் வருடாந்தர கூட்டத்தில் இதே முறையில் இந்நடைமுறை

அங்கீகரிக்கப்பட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களை சபை கொண்டிருக்கும் நிலை உருவாகும் போது அவசியமான இந்த தற்காலிகமானதும் (temporary), அசாதரணமானதுமான (abnormal) மேற்பார்வை முறை நிறுத்தப்படும்.

### ஈ. உதவியாளர்கள்

*1.* உதவியாளர்கள் கருணையின் ஊழியத்திற்காக அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் மூப்பர்களின் கீழ், சபையின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றும் ஊழியத்திற்காக அழைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் 1 தீமோத்தேயு 3ன் இலக்கணங்களின்படி தெரிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

*2.* உதவியாளர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட தொகையில் இருக்க வேண்டியதில்லை. இப்பதவிக்கான வேதபூர்வமான இலக்கணங்களைக் கொண்டவர்களைத் தெரிவு செய்து, சபை தனது தேவைக்கேற்ப நியமிக்கலாம்.

### உ. அதிகாரிகளின் தெரிவு

#### 1. பொதுவான அறிக்கை

மூப்பர்களையும், உதவியாளர்களையும் தெரிவு செய்யும் உரிமை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மட்டுமே உண்டு. ஆனாலும், தன்னால் மூப்பர்களாகவும், உதவியாளர்களாகவும் சபைகளில் தெரிவு செய்யப்படுபவர்களை அங்கீகரித்து நியமிக்கும்படியாக ஒவ்வொரு உள்ளூர் சபைக்கும் கிறிஸ்து கட்டளையிட்டுள்ளார்.

மூப்பர்கள் தங்கள் கரங்களை வைத்து ஜெபித்து மூப்பர்களையும், உதவியாளர்களையும் சபை அதிகாரிகளாக நியமிக்கிறார்கள் (1 தீமோத்தேயு 4:14). ஆகவே, இச்செய்கையின் மூலம் மூப்பர்கள் தங்களுடைய

அங்கீகாரத்தை அளிப்பதால் இந்நியமனத்திற்கு அவர்கள் பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள் (1 தீமோத்தேயு 5:22). எனவே, தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு சபை அதிகாரியும் முழு சபையின் (அங்கத்தவர்களின்) ஒப்புதலை மட்டுமல்லாது மூப்பர்களின் அங்கீகாரத்தையும் பெற்றிருத்தல் வேண்டும். சபை அதிகாரிகளாக கிறிஸ்துவால் நியமிக்கப்படுபவர்களை, இப்பதவிகளுக்குத் தேவையான வேதபூர்வமான இலக்கணங்களை அவர்கள் கொண்டுள்ளார்களா? என்று பார்த்தறிவதன் மூலமும், அப்பதவிகளுக்காகத் தம்மைக் கர்த்தர் அழைத்துள்ளார் என்று அவர்கள் விசுவாசிக்கிறார்களா? என்பதை அறிந்துகொள்ளுவதன் மூலமும் உணர்ந்தறிய வேண்டும். சபை அதிகாரிகளைத் தெரிவு செய்யும் காரியம் மிக முக்கியமான செயலானபடியால் அதனை மிகவும் ஜெபத்தோடு கர்த்தரில் தங்கியிருந்தும், அதற்குரிய வேதப்பகுதிகளை இருதய சுத்தத்தோடு ஆராய்ந்தும், தெரிவு செய்யப்படவிருப்பவர்களை வெளிப்படையாக ஆராய்ந்தும் தெரிவு செய்தல் வேண்டும். ஒவ்வொரு சபை அங்கத்தவரும் இதுபற்றி அறிவுபூர்வமாக சிந்தித்து செயல்படும் கடமைப் பொறுப்புடையவர்களாக உள்ளார்கள்.

## 2. தெரிவு செய்யப்படும் முறை

கர்த்தரால் தெரிவு செய்யப்படும் சபை அதிகாரிகள் பின்வரும் மூன்று படிமுறைகளின்படி தெரிவு செய்யப்படுவார்கள்: பரிந்துரை செய்தல், சபை அங்கீகாரம், நியமித்தல்.

**பரிந்துலை செய்தல்:** மூப்பர்களே சபை அதிகாரிகளைப் பரிந்துரை செய்வர். சபை அங்கத்தவர்கள் இதற்குத் தகுதியானவர்கள் எனத்தென்படுபவர்களை மூப்பர்களுக்கு அறியத் தரலாம்.

**சபை அங்கீகாரம்:** சபை அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்கான சபைக்கூட்டம் கூட்டப்படுவதற்கான தேதியை நான்கு ஞாயிறு தினங்கள் தொடர்ச்சியாக சபையில் அறிவிக்க

வேண்டும். இக்காலப்பகுதியில் சபை அங்கத்தவர்கள் மிகுந்த ஜெபத்தோடு தெரிவுசெய்யப்படவிருக்கும் அதிகாரிகளின் தகுதியை வேதபூர்வமாக ஆராய்தல் அவசியம். அவர்களுடைய தகுதி பற்றிய ஏதும் சந்தேகங்களிருப்பின் அவற்றை நேரில் அவர்களிடமோ அல்லது மூப்பர்களுக்கோ தெரிவிக்க வேண்டும். இச்சந்தேகங்கள் தீர்க்கப்படாவிட்டால் சபைக் கூட்டம் தள்ளிவைக்கப்பட வேண்டும். இதற்கான கூட்டம் நடைபெறும்போது தெரிவு செய்யப்படவிருக்கும் ஒவ்வொரு சபை அதிகாரியின் பெயரும் வாசிக்கப்பட்டு, விவாதித்து வாக்களிப்பு நடத்தப்பட வேண்டும். இதற்கான விவாதம் நடக்கும் வேளையிலும், எழுத்துமூல வாக்களிப்பு நடந்து முடியும் வரையிலும் தெரிவு செய்யப்படவிருப்பவர்கள் தங்களுடைய குடும்பத்தாரோடு சபைக்கூட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாது. கூட்டத்தில் சபை அதிகாரிகளுக்கான இலக்கணங்கள் பகிரங்கமாக வாசித்து, விளக்கம் கொடுக்கப்பட்டு, தெரிவு செய்யப்பட விருப்பவர்களுக்கு மரியாதை அளித்து அவர்களது தகுதி பற்றி தேவபயத்தோடு விவாதிக்கப்பட வேண்டும். கூடுமானவரையில் ஒருமனத்தோடு அதிகாரிகள் ஒவ்வொருவரும் தெரிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறில்லாத நிலைமையில், நான்கில் மூன்று பங்கிற்குக் குறையாத வாக்குகளைப் பெற்றே நியமிக்கப்பட வேண்டும். வேத அடிப்படையிலான சபை அதிகாரிகளுக்கான அனைத்து இலக்கணங்களையும் வாசித்து, ஆக்கபூர்வமாக விவாதித்த பின்னரே இத்தகைய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

***நியமனம்:*** *சபை அதிகாரிகளுக்கான வாக்கெடுப்பு நடந்த பின்பு, வழமையான ஒரு ஞாயிறு ஆராதனை வேளையில் தேவையான நேரத்தை ஒதுக்கி, தேர்வு செய்யப்பட்ட சபை அதிகாரிகளை மூப்பர்கள் தங்கள் கரங்களை வைத்து அதிகாரபூர்வமாக நியமனம் செய்ய வேண்டும். இக்காலங்களில் முழு சபையும் இத்தகைய மரியாதைக்குரிய செயலை விசேஷ ஜெபத்தில் தாங்க*

வேண்டும் (அப்போஸ்தலர் 13:1–3). மூப்பர்கள் தங்கள் கரங்களை வைத்து சபை அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் தங்களுடைய அங்கீகாரத்தைத் தெரிவிக்கிறார்கள். யாராவது ஒருவரை சபை அதிகாரியாக மனப்பூர்வமாக நியமிக்க முடியாவிட்டால் (1 தீமோத்தேயு 5:22) அதற்கான காரணங்களைத் தகுந்தமுறையில் ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் மூப்பர்கள் தெரிவிக்க வேண்டும்.

### *3. மீள் நம்பிக்கை* (Confirmation)

ஏனைய சபை அங்கத்தவர்களுக்கு இருக்கும் விதிகள் அனைத்திற்கும் சபை அதிகாரிகளும் கட்டுப்பட வேண்டும். தங்களுடைய அழைப்புக்கேற்றபடி விசுவாசத்தோடு பணிபுரிகிற வரையிலும், சபை அங்கத்தவர்களுக்கு நம்பிக்கை இருக்கும் வரையிலும் அவர்கள் சபை அதிகாரிகளாக பணி புரியலாம். சபை அங்கத்தவர்கள் தொடர்ந்து அங்கத்தவர்களாக இருப்பதை எந்த விதத்தில் தீர்மானிக்கிறோமோ அதேவிதத்தில் சபை அதிகாரிகள் மீதும் மீள் நம்பிக்கை வைக்கிறோம். தனிப்பட்ட அங்கத்தவர்கள் வாழ்நாள் முழுவதும் சபை அங்கத்தவர்களாக இருப்பதற்கு கிறிஸ்தவருக்குரிய கிருபைகளையும், நடத்தையையும் தங்களில் தொடர்ந்திருக்குமாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்றும், இந்த சட்ட அமைப்பு விதிகளுக்கு உடன்பட்டு பொறுப்போடு நடந்து வரவேண்டுமென்றும், தொடர்ந்தும் இச்சபையில் அங்கத்தவராக இருக்க வேண்டும் என்ற விருப்பத்தை உடையவராக இருக்க வேண்டுமென்பதையும் எதிர்பார்க்கிறோம். அதேபோல வாழ்நாள் முழுவதும் பணிபுரிய மூப்பராகவும், உதவியாளராகவும் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுகிறவர்களும் விசுவாசமுள்ள சபை அங்கத்தவர்களாகவும், மூப்பர், உதவியாளராகிய பணிகளுக்குரிய கிருபைகளைத் தங்களில் தொடர்ந்து வெளிப்படுத்துகிறவர்களாகவும், இப்பணிகளைச் செய்யும் விருப்பத்தைத் தொடர்ந்து கொண்டிருப்பவர்களாகவும் இருக்க வேண்டும். எந்த சபை அதிகாரியின் நடத்தையும்

எந்த நேரத்திலாவது கிறிஸ்தவ நடத்தைக்கு ஒத்துவராததாகக் காணப்பட்டாலோ, நியமிக்கப்பட்ட பணிகளுக்குரிய கிருபைகளை வெளிப்படுத்தத் தவறினாலோ, அந்தப் பணிகளைச் செய்ய விரும்பாமலோ அல்லது அந்தப் பணிகளைச் செய்ய முடியாமலோ இருந்தால் அவர்கள் மூப்பர்களின் சிபாரிசின்படியும், அங்கத்தவர்களின் ஒப்புதலின்படியும் அப்பணிகளில் இருந்து நீக்கப்படவோ அல்லது முறையான சபை ஒழுங்குக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படவோ வேண்டும்.

தனிப்பட்ட எந்த அங்கத்தவராவது ஒரு சபை அதிகாரி தொடர்ந்து பணிபுரிவது முறையல்ல என்பதற்கான தகுந்த காரணங்களைக் கொண்டிருந்தால் அவர் அந்த சபை அதிகாரியைத் தனிமையில் சந்தித்துப் பேச வேண்டும். அந்தக் காரணங்கள் தொடர்ந்தும் நிவர்த்தி செய்யப்படாமலிருந்தால் அவற்றை அந்த அங்கத்தவர் முழு மூப்பர்கள் குழுவின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். இதற்குப் பிறகு அந்த விஷயத்தைப் பற்றிய நீதியான தீர்வைக் காண கிறிஸ்து மூப்பர்களுக்கு உதவுவார் என்ற நம்பிக்கையை அந்த அங்கத்தவர் கொண்டிருக்க வேண்டும். சகல அங்கத்தவர்களும் எப்போதும் 1 தீமோத்தேயு 5:17–20ன் போதனைகளுக்கு கவனத்தோடு கீழ்ப்படிந்து வருவதோடு மூப்பர்களும் அவற்றிற்குக் கீழ்ப்படியும் பொறுப்புள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும்.

### 4. சபை அதிகாரிகளுக்கான ஒழுங்கு நடவடிக்கை

**1. சபை அதிகாரிகள் மீதான ஒழுங்கு நடவடிக்கைக்கான அதிகாரம்** – மூப்பர்கள் சபை அங்கத்தவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பைக் கொண்டிருந்தாலும் அவர்களும் அந்த சபை அங்கத்தவர்களாகவே இருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மூப்பரும் சக மூப்பரின் கண்காணியாக இருக்கும் பொறுப்பைக் கொண்டிருப்பதோடு ஏனைய சபை

அங்கத்தவர்களுக்குரிய சகல ஒழுங்குக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டவர்களாக இருக்கிறார்கள். அத்தோடு சக மூப்பர்களின் பொதுக் கண்டனைக்கும் அவர்கள் உட்பட்டவர்களாக இருக்கிறார்கள் (கலாத்தியர் 2:14; 1 தீமோத்தேயு 5:20). அவர்கள் பணியில் இருந்து இரண்டு காரணங்களுக்காக நீக்கப்படலாம் (1 தீமோத்தேயு 3:1). தங்களுடைய பணியைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டாலோ அல்லது அந்தப் பணிக்குரிய இலக்கணங்களை இழந்தும் அப்பணியில் இருந்து விலக மறுத்தாலோ அவர்கள் பணிநீக்கம் செய்யப்படலாம். அவர்களுடைய நடத்தை ஒழுங்கற்றதாகவோ அல்லது ஒழுக்கமற்றதாகவோ இருந்து சக சகோதரர்களுக்கு தவறான உதாரணத்தை முன்வைப்பதாகவும் கிறிஸ்துவின் நாமத்துக்கும் திருச்சபைக்கும் இழுக்கை ஏற்படுத்துவதாகவும் இருந்தால் அவர்கள் பணி நீக்கம் செய்யப்படலாம்.

**2. சபை அதிகாரிகளுக்கான ஒழுங்கு நடவடிக்கை முறை** – சபை அதிகாரிகளுக்கான ஒழுங்கு நடவடிக்கையைத் தனிப்பட்ட அங்கத்தவர்களோ அல்லது மூப்பர்களோ கொண்டுவரலாம். சபை அதிகாரியொருவரின் நடத்தையினால் பாதிக்கப்பட்ட எந்த அங்கத்தவரும் முதலில் அந்த அதிகாரியோடு தனிமையில் பேசி அதற்குத் தீர்வுகாண வேண்டும். அதற்குத் தீர்வு காணப்படாவிட்டால் அங்கத்தவர் அதை மூப்பர்களுக்குத் தெரிவித்து அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி அவர்களில் தங்கியிருக்க வேண்டும் (மத்தேயு 18:15).

இது மிகவும் பாரதூரமானதும், கவனத்தோடு ஆராயப்பட வேண்டியதுமானதால் மூப்பர்கள் இதை மிகுந்த ஜெபத்தோடு ஆராய வேண்டும் (1 தீமோத்தேயு 5:19). ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது அவசியமானது என்று மூப்பர்கள் கருதினால் அவர்கள் அத்தகைய நடவடிக்கைக்கான காரணத்தை அங்கத்தவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். முறையாகக் கூட்டப்பட்ட அங்கத்தவர்கள் கூட்டத்தில்

அத்தகைய ஒழுங்கு நடவடிக்கைக்கான ஒப்புதல் பெறப்பட வேண்டும். வாக்கெடுப்பின் மூலம் நான்கில் மூன்று பங்கு அங்கத்தவர்களின் பெரும்பான்மையோடு ஒழுங்கு நடவடிக்கை நிறைவேற்றப்படும்.

### 3. சபை அதிகாரிகளின் பணி நீக்கம்

#### 1. பணி நீக்கத்திற்கான காரணங்கள்

அ. **சுயமாக விலகுதல்** – நீதியான, தகுந்த காரணங்களுடன் எந்தவித மனவேறுபாடுமின்றி சபை அதிகாரியொருவர் ஒழுங்கோடு நடந்து தன் பதவியில் இருந்து விலகிக்கொள்ளலாம். அத்தகைய காரணங்களையும், விலகிக்கொள்ளும் நாளையும் குறிப்பிட்டு விளக்கி அவர் மூப்பர்களுக்கு எழுத்தில் ஒரு கடிதத்தைக் கொடுக்க வேண்டும்.

ஆ. **அங்கத்தவர்களின் மீள் நம்பிக்கையை அடையாமல் போகுதல்** – ஒரு சபை அதிகாரியின்மீது மீள் நம்பிக்கை வைப்பதற்கான நிலை உருவானால் அதைச் சபை அதிகாரியின் நியமனத்திற்கு அவசியமான 9:2ன்படியான விதிகளைப் பின்பற்றி செய்ய வேண்டும். அங்கத்தவர்களில் நான்கில் மூன்று பங்கினரின் வாக்குகள் கிடைக்காதபோது சபை அதிகாரியொருவர் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும்.

இ. **பணியைத் தொடர்ந்து செய்ய முடியாமல் போவதால் நீக்கப்படுதல்** – ஒரு சபை அதிகாரி குற்றஞ்சாட்டப்படாத நிலையில், சரீர பலவீனத்தின் (Infirmities) காரணமாகவும் (1 சாமுவேல் 8:4–5) வேறுவிதங்களிலும் தன் பணியைத் தொடர்ந்து செய்யக்கூடிய நிலையில் இல்லை என்று மூப்பர்கள் தீர்மானித்தால் (2 சாமுவேல் 21:15–17), அவரில்லாமல் கூட்டப்படுகின்ற அங்கத்தவர்களின் கூட்டத்தில் மூப்பர்கள் அவருடைய பதவி நீக்கத்தைச் சபைக்கு சிபாரிசு செய்வார்கள். அவர் அந்தப் பணியில்

தொடர சபை அங்கத்தவர்களில் நான்கில் மூன்று பங்கினரின் வாக்குகள் அவசியம்.

*ஈ. **சபை ஒழுங்கு நடவடிக்கை மூலம் நீக்கப்படுதல்*** – ஒரு சபை அதிகாரி ஒழுங்கு நடவடிக்கை மூலம் பதவி நீக்கம் செய்யப்படலாம் (8:4).

## *2. பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களின் நடத்தை*

அ. பதவி நீக்கம் செய்யப்பட்டவர் தொடர்ந்து தன் பதவிக்குரிய பெயரையோ, கடமையையோ, அதிகாரத்தையோ இந்த சபையிலோ அல்லது வெளியில் வேறெந்த சபைகளிலுமோ, சமுதாயத்திலோ பயன்படுத்தக்கூடாது.

ஆ. அனைத்து முன்னால் சபை அதிகாரிகளும் உண்மையின்படி நடந்து சபை சம்பந்தமான சகல நம்பிக்கையோடு இரகசியமாக வைத்திருக்க வேண்டிய விஷயங்களையும் தொடர்ந்து தங்களுக்குள் காத்துக்கொள்ள வேண்டும் (நீதிமொழிகள் 11:13).

இ. ஏற்கனவே பதவியில் இருந்து பின்னால் அதிலிருந்து விலகிய ஒரு முன்னால் சபை அதிகாரி மறுபடியும் அப்பதவியில் இருக்க விதி 8:2 ஐப் பின்பற்ற வேண்டும்.

## விதி 9: சபைக்கூட்டங்கள்

1. சபை கூடிவருகின்றபோது கிறிஸ்து அங்கே இருப்பதால், கூட்டங்கள் அனைத்தும் ஐக்கிய மனப்பான்மையோடும், வழிபாட்டுணர்வோடும், தேவபயத்தோடும் நடத்தப்பட வேண்டும். ஆணும், பெண்ணுமாக அங்கத்தவர்கள் இந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டபோதும், 1 கொரிந்தியர் 14:34–35, 1 தீமோத்தேயு 2:11–14 ஆகிய வேதப்பகுதிகள் தரும் போதனைகளின்படி ஆண் அங்கத்தவர்கள் மட்டுமே இந்தக் கூட்டங்களில் அறிக்கையளிக்கவோ அல்லது கேள்விகள் எழுப்பவோ அனுமதிக்கப்படுவார்கள். பெண் அங்கத்தவர் கேள்விகள் இருப்பின் அவற்றை தங்களுடைய

கணவன்மாரிடமோ அல்லது மூப்பர்களிடமோ கேட்டு விளக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

*2.* வருடத்திற்கு ஒருமுறை தவறாது ஒரு பொதுக்கூட்டத்தை கூட்ட வேண்டும். சபை ஊழியங்கள் பற்றிய அறிக்கைகளைக் கொடுப்பதற்கும், சபை அதிகாரிகளைத் தெரிவு செய்யவும், சபைசம்பந்தமான வேறு முக்கிய விஷயங்கள் பற்றி ஆலோசிக்கவும் இக்கூட்டம் கூட்டப்பட வேண்டும். இது தவிர காலாண்டுக்கொருமுறை (Quarterly) ஒரு கூட்டத்தைக் கூட்ட வேண்டும். ஒரு கூட்டத்தைக் கூட்டும்படி அங்கத்தவர்களில் ஐம்பது வீதம் *(50%)* பேர் காரணங்களோடு கையெழுத்திட்டு எழுத்தில் கொடுக்கும்போது மூப்பர்கள் ஆலோசித்து அந்தக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

*3.* பொதுவாக மூப்பர்களால் தலைவராக தெரிவு செய்யப்பட்டவரே (Chairman the elders) இந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்குவார். அப்படியில்லாத நிலைமையில் மூப்பர்கள் தங்களில் வேறொருவரைத் தெரிவுசெய்து கூட்டத்தை தலைமை தாங்கச் செய்வர்.

*4.* சபைக்கூட்டங்கள் பொதுவாக அங்கத்தவர்களுக்கு மட்டுமானதாக இருந்த போதும் மேற்பார்வையளிக்கும் சபை மூப்பர்கள் இக்கூட்டங்களில் கலந்துகொள்ளும்படி மூப்பரால் அழைக்கப்படுவார்கள்.

*5.* அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கும், ஒழுங்குக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவரவும், போதனைகள் சம்பந்தமான முடிவுகளை எடுக்கவும், சுவிசேஷ ஊழியங்களுக்கான தீர்மானங்களை எடுக்கவும், சபை நிறுவவும் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டவர்களைத் தெரிந்தெடுத்து அனுப்பவும் மற்றும் ஏனைய முக்கியமான நடவடிக்கைகளுக்காகவும் சபைக்கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும்.

*6.* ஞாயிறு ஆராதனைக் கூட்டங்களில் இத்தகைய கூட்டங்களுக்கான அறிவிப்புகளைக் கொடுக்க வேண்டும்.

*சபை நடப்பு சம்பந்தமான எந்தக் கூட்டத்திற்கான அறிவிப்பும் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன் கொடுக்க வேண்டும்.*

*7. அனைத்து அங்கத்தவர்களும் சபைக்கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும். இருப்பினும் ஒரு கூட்டத்தை நடத்த குறைந்தது ஐம்பது வீதம் (50%) அங்கத்தவர்கள் அவசியம். வாக்கெடுப்பில் கலந்துகொள்ள ஓர் அங்கத்தவர் பதினெட்டு வயதை எட்டியவராக இருக்க வேண்டும்.*

*8. எல்லா முடிவுகளுக்கும் அனைத்து அங்கத்தவர்களின் முழுமனதான அங்கீகாரத்தையே எப்போதும் நாடவேண்டியது அவசியம். இருப்பினும் அவ்வாறில்லாத நிலைமையில் வாக்கெடுப்பின் மூலம் நான்கில் மூன்று பங்கினரின் ஒப்புதல் இறுதி முடிவாகக் கருதப்படும்.*

*9. வாக்கெடுப்பின் மூலமே எல்லா விஷயங்களுக்குமான முடிவுகளும் எடுக்கப்பட வேண்டும்.*

*10. கூட்ட நடவடிக்கைகளின் அறிக்கையை மூப்பர்களால் நியமிக்கப்பட ஒருவர் எழுத்தில் வடிப்பார். அத்தகைய கூட்ட நடவடிக்கைகள் கவனமாக எழுத்தில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.*

**விதி 10: சகோதர சபைகளுக்கிடையிலான உறவு**

*1. சபைக்குத் தலைவரான கிறிஸ்துவைத் தவிர வேறு எந்த அதிகாரத்தையும் நாம் அங்கீகரிப்பதில்லை (எபேசியர் 5:23). வேதபூர்வமாக சபையால் தெரிவு செய்யப்பட்ட மூப்பர்களின் மூலமாகவே கிறிஸ்து தன்னுடைய சபையை ஆளுகிறார் (அப்போஸ்தலர் 14:21–23; 1 தீமோத்தேயு 3:1; தீத்து 1:5). அனைத்து சந்தர்ப்பங்களிலும், அனைத்து நடவடிக்கைகளிலும் வேதத்தின் அதிகாரத்திற்கே மூப்பர்கள் கட்டுப்பட வேண்டும் (அப்போஸ்தலர் 16:4; 1 கொரிந்தியர் 7:17).*

*2. ஒரே நோக்கத்தையும், ஒரே சிந்தையையும் கொண்டிருக்கும் சகோதர சபைகளுடன் ஒரே நோக்கமுள்ள காரியங்களில் இணைந்துழைக்க வேண்டும் (2 கொரிந்தியர் 8:18–24). அவர்களுடைய துணையையும் (1 கொரிந்தியர் 16:1–2: பிலிப்பியர் 4:15), ஆலோசனையையும் (1 தெசலோனிக்கேயர் 1:6; 2:14) முக்கியமான விஷயங்களில் நாம் நாடினாலும் வேறு எந்த சபையினதும், சபைகளினதும் முடிவுகள் இந்த சபையைக் கட்டுப்படுத்தாது (அப்போஸ்தலர் 14:21–23; எபிரெயர் 13:17; 1689 விசுவாச அறிக்கை 26:15).*

*3. இந்த சபையின் தனிப்பட்ட அங்கத்தவர்களுக்கும், கூட்டாகவும் அவர்களுடைய ஆவிக்குரிய நிலைக்கு அவசியமான பாதுகாப்பை அளிப்பதற்கு இந்த சபை ஒரே சிந்தையுள்ள சகோதர சபைகளின் மூப்பர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளும். இத்தகைய உதவியை நமக்கு அளிக்கும் சபைகள் பற்றிய விளக்கம் வருடாந்தர சபைக் கூட்டத்தில் விளக்கப்படும். இந்த சபையின் எந்த அங்கத்தவராவது தான் தவறாக நடத்தப்பட்டாலோ, வேதத்திற்கு விரோதமான முறையில் நடத்தப்பட்டாலோ, சபை சட்ட விதிகளுக்கு மாறாக நடத்தப்பட்டாலோ அந்த விஷயத்தில் ஆலோசனை அளிக்கும்படியும், தலையிடும்படியும் உதவியளிக்கும் சபை மூப்பர்களுக்கு விண்ணப்பிக்கலாம். இந்த சபையின் மூப்பர்களின் எண்ணிக்கை ஒன்றாக மாறினால் அல்லது இல்லாமல்போனால் ஒரே சிந்தையுள்ள சகோதர சபையின் மேற்பார்வையை விதி 8:6ன்படி நாடலாம்.*

**விதி 11: திருச்சபை சட்ட விதிகளின் திருத்தம்**

*அ. வேதத்தைப் போல ஆவியினால் அருளப்படாததால் இந்த சட்ட அமைப்பு விதிகள் பூரணமானவையல்ல. இருந்தபோதும் இந்த சபையை வேத அடிப்படையில் கர்த்தருக்குப் பயந்து ஒழுங்கோடு நிர்வகித்து வரவேண்டும் என்ற நீதியான நோக்கத்தை இது வெளிப்படுத்துகிறது. மேலும், சபை அதிகாரிகள் உட்பட சபை அங்கத்தவர்களாகிய நாம்*

இந்த சட்ட அமைப்பு விதிகளுக்கு ஏற்ப நடந்துகொள்வதாக கர்த்தருக்கு முன் உடன்படிக்கை எடுத்திருக்கிறோம். ஆகவே, கர்த்தரின் ஒன்பதாம் கட்டளையின்படி (உண்மையோடு நடந்துகொள்ளுதல்) சபை அதிகாரிகள் உட்பட சகல அங்கத்தவர்களும் இதற்கு கட்டுப்பட்டு நடந்துகொள்ளுதல் அவசியம்.

ஆ. இச்சட்ட அமைப்பு விதிகளில் எதாவதொன்று வேத ரீதியில் அமையவில்லை என்று அங்கத்தவரொருவர் எண்ணினால் அதை உடனடியாக மூப்பர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். மூப்பர்களுக்கு அது நியாயமானதாகப்பட்டால் அதற்கான காரணத்தையும், தீர்வையும் முறையாகக் கூட்டப்பட்ட அங்கத்தவர்களின் கூட்டத்தில் தெரியப்படுத்த வேண்டியது அவர்களுடைய கடமை. இச்சட்ட விதிகளில் திருத்தம் கொண்டுவரும் அவசியம் ஏற்படுமானால் அங்கத்தவர்களுக்கு அதுபற்றி நான்கு வாரங்களுக்கு முன்பு எழுத்து மூலம் அறிவிப்பு கொடுக்கப்படல் வேண்டும்.

இ. முறையாகக் கூட்டப்பட்ட அங்கத்தவர்கள் கூட்டத்தில் திருத்தங்கள் ஆராயப்பட்டு நான்கில் மூன்று பங்கு பெரும்பான்மையினரின் ஒப்புதலோடு இந்த சட்ட அமைப்பு விதிகளில் எந்தத் திருத்தமும் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

## சபை சட்ட அமைப்பு விதியின் திருத்தம்

### *நாள்:* 04.01.2015, *சபை அங்கத்தவர்களின் கூட்டம்*

**இதுவரை இருந்து வந்த விதி.**

*விதி 9*

*2. வருடத்திற்கு ஒருமுறை தவறாது ஒரு பொதுக்கூட்டத்தை கூட்ட வேண்டும். சபை ஊழியங்கள் பற்றிய அறிக்கைகளைக் கொடுப்பதற்கும், சபை அதிகாரிகளைத் தெரிவு செய்யவும், சபைசம்பந்தமான வேறு முக்கிய விஷயங்கள் பற்றி ஆலோசிக்கவும் இக்கூட்டம் கூட்டப்பட வேண்டும். இது தவிர காலாண்டுக்கொருமுறை (Quarterly) ஒரு கூட்டத்தைக் கூட்ட வேண்டும். ஒரு கூட்டத்தைக் கூட்டும்படி அங்கத்தவர்களில் ஐம்பது வீதம் (50%) பேர் காரணங்களோடு கையெழுத்திட்டு எழுத்தில் கொடுக்கும்போது மூப்பர்கள் ஆலோசித்து அந்தக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.*

**திருத்தம்**

*விதி 9*

*2. வருடத்திற்கு ஒருமுறை தவறாது ஒரு பொதுக்கூட்டத்தை கூட்ட வேண்டும். சபை ஊழியங்கள் பற்றிய அறிக்கைகளைக் கொடுப்பதற்கும், சபை அதிகாரிகளைத் தெரிவு செய்யவும், சபைசம்பந்தமான வேறு முக்கிய விஷயங்கள் பற்றி ஆலோசிக்கவும் இக்கூட்டம் கூட்டப்பட வேண்டும்.* **இது தவிர மூப்பர்களின் ஆலோசனைப்படி தேவைக்கேற்ப கூட்டப்படும்.** *ஒரு கூட்டத்தைக் கூட்டும்படி அங்கத்தவர்களில் ஐம்பது வீதம் (50%) பேர் காரணங்களோடு கையெழுத்திட்டு எழுத்தில் கொடுக்கும்போது மூப்பர்கள் ஆலோசித்து அந்தக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.*